1926 முதல் திருமண பட்டு புடவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்
காஞ்சிபுரம்
பச்சையப்பாஸ்
Since 1926
சில்க்ஸ்
சென்னை * காஞ்சிபுரம் * வேலூர் * திருவண்ணாமலை

RNI.Reg.No.TNTAM/2019/78889

# உள்ளாட்சி சாரல்
Ullatchi Saral

* சென்னை * மதுரை

உள்ளாட்சியே இந்தியாவின் நாடித்துடிப்பு

காலை நாளிதழ்

சென்னை உள்ளாட்சி : 6 சாரல் : 119 04.09.2024 புதன்கிழமை ஆசிரியர்: M.காளியம்மாள் ullatchisaral@gmail.com பக்கம் : 8 விலை ரூ.4

# “இனம், மதம், மொழி பிரிவினைப் போக்குக்கு மாணவர்கள் பலியாகக் கூடாது”

## ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவுரை




**சென்னை, செப்.04:**
கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா மீதான உலக நாடுகளின் பார்வை மாறியுள்ளது என்றும், உலகளவில் இந்தியா 3வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளது என்றும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பெருமிதத்துடன் கூறினார். மேலும்,இந்தியதேசத்தை சிலர் இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால், மொழியின் பெயரால் துண்டாட நினைக்கிறார்கள். இத்தகைய பிரிவினை போக்குக்கு மாணவர்கள் ஒருபோதும் பலியாகி விடக்கூடாது என்று அவர் கூறினார்.

தமிழ்நாடு ஹிந்தி சாகித்ய அகாடமி மற்றும் சென்னை அரும்பாக்கம் டி.ஜி. வைஷ்ணவா கல்லூரி சார்பில் தேசிய கருத்தரங்கம் மற்றும் விருது வழங்கும் விழா அக்கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. இக்கருத்தரங்கை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியது: “தமிழ்மொழி மிகவும் பழமையான மொழி. தமிழில் பேச வேண்டும் என்பதுஎனதுஆசை.என்னால் தமிழை வாசிக்க முடியும். மற்றவர்கள் தமிழில் பேசினால் அதை புரிந்துகொள்ள முடியும். ஆனால், தமிழில் பேசுவதுதான் மிகவும் சிரமமாக உள்ளது. கண்டிப்பாக நானும் ஒரு நாள் தமிழில் பேசுவேன். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

பழமையும். சிறப்பும் வாய்ந்த தமிழ் மொழியை உலக அளவில் கொண்டு செல்ல பிரதமர் மோடி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். பனாரஸ் பல்கலைக்கழகத்தில் பாரதியார் பெயரில்தமிழ் ஆய்வுஇருக்கை அமைக்க ஏற்பாடு செய்துள்ளார்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இன்றைய தினம் ஒட்டுமொத்த உலகின் பார்வையும் இந்தியா பக்கம் திரும்பியுள்ளது. இந்தியாவைஒருபொருட்டாக எண்ணாத நாடுகள் தற்போது இந்தியாவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. இந்தியா மீது உலகநாடுகளுக்கு நம்பிக்கையும் மிகப்பெரிய எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாக இந்தியா மிக வேகமாக வளர்ந்து வருகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7 சதவீதமாக உயர்ந்துள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் முன்னேறி வருகிறோம். உலகின் 3வது பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. முன்பு வெறும் 300, 400 என்ற அளவில் இருந்த ஸ்டார்ட் அப் தொழில்நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது ஒரு லட்சத்து 25 ஆயிரம் அளவுக்கு அதிகரித்துள்ளது.

அதில் 20 சதவீத தொழில்நிறுவனங்கள் யூனிகார்ன் நிறுவனங்கள், அதாவது ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் மூதலீடுகள் கொண்ட நிறுவனங்கள். அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியா வளர்ந்த நாடாக மாறும். கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி ஏழை மக்கள் வறுமை கோட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ள னர். தற்போது உலக அளவில் எங்கு பார்த்தாலும் போர் சூழல் நிலவுகிறது. ரஷ்யா உக்ரைன், இஸ்ரேல் காஸா என ஆங்காங்கே போர்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

ஒட்டுமொத்த உலகை அழித்துவிடும் ஆற்றல் கொண்ட அணுகுண்டுகளை சில நாடுகள் வைத்துள்ளன. ஆனால், இந்தியா எப்போதும் அமைதியை விரும்பக்கூடிய நாடாகவே இருந்து வருகிறது. உலகில் ஒருபுறம் சில நாடுகளில் செல்வம், பொருளாதார வளமும் மிதமிஞ்சி காணப்படுகிறது. ஆனால், அதேநேரத்தில் சில நாடுகளில் பசியும், பட்டினியும் நிலவுகிறது.

கரோனா தொற்று காலத்தில் உலக நாடுகளுக்கு தடுப்பூசியை இலவசமாக வாரி வழங்கிய நாடு இந்தியா. உதவும் குணம் என்பது இந்திய நாட்டின் மரபணுவில் இருக்கிறது.

இந்திய தேசத்தை சிலர் இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால், மொழியின் பெயரால் துண்டாட நினைக்கிறா ர்கள். இத்தகைய பிரிவினை போக்குக்கு மாணவர்கள் ஒருபோதும் பலியாகி விடக்கூடாது. வாழ்க தமிழ், வாழ்க இந்தி, வாழ்க பாரதம்” என்று ஆளுநர் ஆர்.என். ரவி பேசினார். விழாவில், தமிழ்நாடு ஹிந்தி சாகித்ய அகாடமியின் தலைவர் பேராசிரியை நிர்மலா எஸ்.மவுரியா, செயலாளர் ஈஸ்வர் கருண், கல்லூரியின் செயலாளர் அசோக் குமார் முந்த்ரா, முதல்வர் எஸ்.சந்தோஷ் பாபு மற்றும் மாணவ மாணவியர் கலந்துகொண்டனர்.

# பாலியல் குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை விதிக்கும் மசோதா

## மேற்கு வங்க பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றம்

**கொல்கத்தா, செப்.04:**
பாலியல் குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை விதிக்கும் மசோதா, மேற்கு வங்க சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.



பாலியல் வன்கொடுமை எதிர்ப்பு மசோதாவான ‘அபராஜிதா பெண் மற்றும் குழந்தை (மேற்குவங்ககுற்றவியல் சட்டங்கள் திருத்தம்) மசோதா 2024’, அம்மாநில சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. முதல்வர்மம்தாபானர்ஜியின் அறிவிப்புக்கு இணக்க. மேற்கு வங்க சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டு, இந்த மசேதா சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. மாநில சட்ட அமைச்சர் மோலோய் கட்டக், மசோதாவை சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தினார்,

மசோதா மீதான விவாதத்தில் பேசிய முதல்வர் மம்தா பானர்ஜி, "இது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க, முன்மாதிரியான மசோதா. நல்ல எண்ணம் உள்ளவர் எவரும் இதை ஆதரிப்பர். இந்த மசோதாவில் கையெழுத்திட மாநில ஆளுநரை, பாஜக சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டும்.

ஆர்.ஜி. கர் மருத்துவமனை பயிற்சி மருத்துவர் தொடர்பான வழக்கில் மாநில காவல் துறை விரைவாக குற்றவாளிகளை கைது செய்யாவிட்டால், வழக்கை சிபிஐயிடம் ஒப்படைப்போம் என்று இறந்தவரின் குடும்பத்தினரிடம் நான் கூறியிருந்தேன். கொல்கத்தாஉயர்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டது. இப்போது, சிபிஐயிடம் இருந்து எங்களுக்கு நீதி வேண்டும். குற்றவாளிகளை சிபிஐ தூக்கிலிட வேண்டும்'' என தெரிவித்தார்.

மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு அளித்தன. சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி, இந்த மசோதாவுக்கு முழு ஆதரவை வழங்குவதாக தெரிவித்தார்.

அதேநேரத்தில், இந்த மசோதாவில் சில திருத்தங்களை அவர் முன்வைத்தார். எனினும், அந்த திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மசோதாவை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய பாஜக சட்டமன்ற உறுப்பினர்கள், ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில் முதல்வர் மம்தா பானர்ஜிதனதுபதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோஷமிட்டனர்.

மசோதா மீதான விவாதத்தை அடுத்து குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதனையடுத்து, இந்த மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மசோதாவின் முன்மொழிவு: பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட நபர் அல்லது நபர்களின் செயல்களால், பாதிக்கப்பட்ட பெண் மரணம் அடைந்தாலோ அல்லது உடல் ரீதியாக முடக்கப்பட்டாளோ குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்க முடியும். மேலும், பாலியல் வன்கொடுமை மற்றும் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கு பரோல் இல்லாமல் ஆயுள்தண்டனைவிதிக்க முடியும். ஆளுநரின் ஒப்புதலை அடுத்து இந்த மசோதா சட்ட வடிவம் பெறும்.

# “பார்முலா 4 கார் பந்தயத்தை சென்னைக்கு கொண்டு வந்ததில் பெருமை கொள்கிறோம்” – அமைச்சர் உதயநிதி

**சென்னை, செப்.04:**
பார்முலா 4 கார் பந்தயத்தை சென்னைக்கு கொண்டு வந்ததில் பெருமை கொள்கிறோம் என விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், பார்முலா 4 கார் பந்தயம் கடந்த ஆக. 31ம் தேதி சென்னை தீவுத்திடலில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கி கொடியசைத்து தொடங்கி வைத்தார். ஆக.31 மற்றும் செப்.1 என இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற கார் பந்தயத்தை காண ஏராளமான பார்வையாளர்கள் திரண்டு வந்திருந்தனர்.

தெற்காசியாவில் இது வரை நடைபெறாத மிக நீளமான (3.5 கிமீ) சாலை கார் பந்தயம் எனும் பெருமையை சென்னை கார் பந்தயம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதை யொட்டி போட்டிக்கான முன்னேற்பாடுகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. இரு பிரிவுகளின்கீழ் மொத்தம் 14 அணிகளில் 40 பேர் பங்கேற்றனர். பயிற்சி போட்டிகளை தொடர்ந்து தகுதிச்சுற்று, பிரதான பந்தயங்கள் அனைத்தும் திட்டமிட்டபடி வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தன. இந்த போட்டிகளில் இங்கிலாந்து, போர்ச்சுகல், செக் குடியரசு, பெல்ஜியம், டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், மலேசியா, ஆஸ்திரேலியா நாடுகளை சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். நடந்து முடிந்த பார்முலா 4 கார் பந்தயம் பல்வேறு தரப்பினரின் பாராட்டை பெற்றுள்ளது.



இது தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: திரில்லான சென்னை பார்முலா 4 கார் பந்தயம் கண்கவர் பாணியில் இனிதே நிறைவடைந்துள்ளது. இந்த வரலாற்று நிகழ்வை காண்பதற்கு ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் ஆர்வத்துடன் வருகை தந்திருந்தனர். அதற்கேற்ப மைதானத்தில் கார் பந்தய ஓட்டுநர்கள், பிரகாசமான ஒளிரும் இரவில் தங்களது வாகனங்களில் அவர்களது திறமைகளை வெளிப்படுத்தினர். அந்த வகையில் பார்முலா 4 கார்பந்தயம் இந்தியா மற்றும் தமிழகத்தின் விளையாட்டு வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல் ஆகும். பார்முலா கார் பந்தயத்தை சென்னைக்கு கொண்டு வந்ததில் பெருமை கொள்கிறோம்.

இதில் வெற்றி பெற்றவர்கள், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். இந்த நிகழ்வை நனவாக்குவதற்கு ஆதரவளித்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எனது சிறப்பு நன்றிகள். இந்நிகழ்வை மாபெரும் வெற்றியடைய செய்த அரசு அதிகாரிகள், ஆர்.பி.பி.எல். நிர்வாகம் மற்றும் சென்னை மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்உதயநிதிக்கு முதல்வர் ஸ்டாலின் பாராட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பதாவது:

பார்முலா 4 சென்னை கார் பந்தயத்தை மாபெரும் வெற்றியடையச் செய்த விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச்சேர்ந்த அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

செஸ் ஒலிம்பியாட், சென்னை ஓபன் 2023 டென்னிஸ் தொடர், ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி 2023, பன்னாட்டு அலைச்சறுக்கு போட்டி 2023,

ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023 மற்றும் கேலோ இந்தியா 2023 ஆகியவற்றின் வெற்றிகளைத் தொடர்ந்து, தமிழகம் விளையாட்டு மேம்பாட்டுக்கான சிறப்பான வளர்ச்சிப்பாதையை அமைத்து வருகிறது. எல்லைகளைத் தொடர்ந்து விரிவடையச் செய்வோம், ‘இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் தமிழகம்’ எனும் பெருமையை உறுதியாகத் தக்கவைப்போம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஜி.நடுப்பட்டி ஊராட்சியில் அட்மா திட்டத்தின் கீழ்

# மண்புழு உரம் தயாரிக்கும் தார்பாயை விவசாயிக்கு வழங்கி செயல் விளக்கம்




**திண்டுக்கல்,செப்.04:** திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் ஜி. நடுப்பட்டி ஊராட்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரமோகன் அறிவுரையின்படி முன்னோடி விவசாயி ராமலிங்கம் அவர்களுக்கு மண்புழு உரம் தாயாரிக்கும் தார்பாய் முழு மானியத்தில் வழங்கப்பட்டு

அதனை செயல் விளக்கமாக அருகில் உள்ள விவசாயிகளுக்கும் செய்து காண்பிக்கப் பட்டது. இச் செயல் விளக்கத்தில் காந்தி கிராமம் பல்கலைக்கழக வேளாண் மற்றும் கால்நடை அறிவியல் கல்லூரியில் இளநிலை வேளாண்மை பட்டப் படிப்பு பயிலும் மாணவிகள் புவனேஸ்வரி. பவானி. அக்ஷிதா. அபிதா தேவி. ஆகியோர் தங்களின் ஊரக வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின் கீழ் இச் செயல் விளக்கத்தில் கலந்து கொண்டனர். ஏரில்லா உலகம் எனப்படும் மண்புழுவை பற்றியும் மண்புழு வளர்ப்பு பற்றியும் செயல் விளக்கம் அளிக்கப் பட்டது.

மண்புழுக்கள் 120 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றின. மண்புழுவை உழவனின் நண்பன் என்பதை நாம் மனதில் நினைவில் கொள்ள வேண்டும். இந்த செயல் விளக்கத்தில் முதல் பரப்பாக வைகோலும் அதன் மேல் சாணமும் பரப்ப வேண்டும். அதற்கு அடுத்த பரப்பில் இலை தழைகளையும் தொலுஉரத்தையும் விட வேண்டும். இந்த அமைப்பை நிழலான இடத்தில் வைக்க வேண்டும். வெப்பமும் மிகுந்த வெளிச்சமும் புழுவுக்கு ஆகாது. இதில் உருவாகும் வெப்பத்தை குறைப்பதற்காக தினமும் ஒருமுறை தண்ணீர் தெளிப்பது அவசியம். வெப்பம் தணிந்தவுடன் இதில் மண்புழுவை விட வேண்டும். அந்த தொட்டி முக்கால் பாகம் நிறைந்த உடன் அதன் மேல் சணல் சாக்குகளை போட்டு மூட வேண்டும். மண்புழு தொழு உரம் உருவாகுவதற்கு

பெரிய புழுக்களை விட சிறிய புழுக்கள் பெரும் பங்கு வகிக்கிறது இதன் பெருக்கத்திற்கு உதாரணமாக மண்புழு வளர்ப்பில் தேர்ச்சி பெற்ற திருச்சியை சேர்ந்த அந்தோணியம்மாள் என்பவர் சிறந்த முறையில் சாணம் வைக் கோல் மற்றும் புளித்த மோர் ஆகிய இவற்றை உருண்டையாக உருவாக்கி மண்புழு மேட்டில் இட்டால் மண்புழுக்கள் குடைந்து அதில் முட்டைகளை இடும். இதனால் மண்புழு தொழு உரம் மிக விரைவில் உருவாகிறது. மண்புழுவின் வாழ்நாள் நோக்கமே ஏர் இல்லாமல் உழவு செய்வதாகும். நம் தொழு உரத்தை அடி உரமாக மட்டுமே இட முடியும் ஆனால் மண்புழு தொழு உரத்தை மேலுரமாகவும் இட முடியும். இந்த செயல் விளக்கத்தினை அட்மா திட்ட வட்டார மேலாளர் சுகன்யா அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்து காண்பித்தனர்.

மொக்கத்தாண்பாறை கிராம மலைவாழ் மக்கள் நலனுக்காக ரூபாய் 40.34 லட்சம் மதிப்பீட்டில்

# அனைத்து வசதிகளுடன் கூடிய 10 புதிய வீடுகள் கட்டுவதற்கான பணிகள்

## கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டாக்டர். மோனிகா ராணா, செய்தியாளர்கள் உடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆய்வு

**மதுரை,செப்.04:** மதுரை மாவட்டம் மொக்கத்தாண்பாறை கிராம மலைவாழ் மக்கள் நலனுக்காக ரூபாய் 40.34 லட்சம் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய10 புதிய வீடுகள் கட்டுவதற்கான பணிகள் குறித்து கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டாக்டர். மோனிகா ராணா, செய்தியாளர்கள் உடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்தார்.

மதுரை மாவட்டம். சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம் மொக்கத்தாண் பாறை கிராமத்தில் மலைவாழ் மக்கள் நலனுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் தலா 4 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 10 புதிய வீடுகள் கட்டுவதற்கான பணிகள் குறித்து கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டாக்டர். மோனிகா ராணா, செய்தியாளர்கள் உடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டாக்டர். மோனிகா ராணா, தெரிவிக்கையில்: மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே உள்ள மொக்கத்தாண் பாறை கிராமத்தில் மலைவாழ் மக்கள் 30க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். மலைகளில் தேன், கிழங்கு.

மூலிகைப் பொருட்களை விற்பனை செய்வதை வாழ்வாதாரமாக கொண்டு வருகின்றனர். வாழ்வாதாரத்திற்காக குழந்தைகளும் பெற்றோருடன் செல்வதால், அவர்களின் கல்வி பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள. சங்கீதா, சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம் மொக்கத்தாண் பாறை கிராமத்தில் நேரடியாக ஆய்வு செய்தார்.

குழந்தைகளின் கல்வி வளர்ச்சி மிகவும் அவசியம் என்றும் குழந்தைகளை கட்டாயம் பள்ளிக்கு அனுப்புமாறு அறிவுறுத்தினார். அப்போது மோக்கத்தான்பாறை கிராமங் பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும் எனவும், வீடுகள் பாழடைந்து கிடப்பதாகவும், மழைக் காலத்தில் வீட்டுக்குள்ளேயே இருக்க முடியாத நிலை உள்ளது என்றும் கூறி பல்வேறு கோரிக்கை களை மலைவாழ் மக்கள் முன்வைத்தனர்.

இதனையடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவின் அடிப் படையில் முதற்கட்ட மாக இக்கிராமத்தில் தலா 4 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அனைத்துவசதிகளுடன் கூடிய 10 புதிய வீடுகள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்போடு இப்பணிகள்

மேற்கொள்ளப் பட்டன. கட்டுமானப் 95 சதவீதம் நிறைவேற்றப் பட்டுள்ளன. விரைவில் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு பயனாளிகளுக்கு இவ்வீடுகள் வழங்கப்பட உள்ளன என கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டாக்டர். மோனிகா ராணா, செய்தியாளர் சுற்றுப்பயணத்தின் போது தெரிவித்தார்.

**வாகனம் ஓட்டும் போது கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும்**

# 6-வது மாநில அளவிலான கூடோ போட்டி




**கோவை,செப்.04:** கோவை மாவட்டம் ஷான் அகாடமி ஆப் மார்ஷ்சல் ஆர்ட்ஸ் மற்றும் கென்ஷு கலை மற்றும் விளையாட்டு அகாடமியின் சார்பில் திருச்சியில் நான்கு நாட்கள் நடைபெற்ற 6 வது மாநில அளவிலான கூடோ போட்டி மற்றும் 7வது தமிழ்நாடு மாநில கூடோ பயிற்சி முகாமில் கலந்துகொண்டனர் இம்முகாமிற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் மாணவ மாணவியர் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் கோவை அகாடமி ஆப் மார்ஷ்சல் ஆர்ட்ஸ் மற்றும் கென்ஷு கலை மற்றும் விளையாட்டு அகாடமியின் மாணவ மாணவியர் இ.உதயா கிருஷ்ணன், எஸ்.பவித்ரா, சாய் மாதங்கி,எஸ் .ஹெச். அபிநவ், அபிநவ் கிருஷ்ணன், சாட்விக் சாதன் ஆகியோர் கலந்து கொண்டு 6தங்கம் 1 வெள்ளி என 7 பதக்கங்களை வென்றனர்.

மேலும் வருகின்ற நவம்பர் மாதம் குஜராத்தில் நடைபெற உள்ள தேசிய கூடோ போட்டிக்கு மற்றும் இன்டர்நேஷனல் அக்ஷய் குமார் போட்டிக்கு கூடோ ஃபெடரேஷன் கப் போட்டிக்கு தகுதி பெற்றனர்.இது கோவை மாவட்டத்திற்கே முதலாவதாக ஓவரால் சாம்பியன் ஷிப் டிராபியை கைப்பற்றியது குறிப்பிடதக்கது. இப்போ போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களை அகாடமியின் தலைமை பயிற்சியாளரும் தமிழ்நாடு கூடோ சங்கத்தின் அமைப்பு செயலாளருமான ரென்சி. டாக்டர் பிராங்ளின் பென்னி மற்றும் அகாடமியின் பயிற்சியாளர் அமிர்தராஜ், சூரிய பிரபு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்

மோதிலால் ஓஸ்வால் அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனம்

# ஆகஸ்ட் 26, நிலவரப்படி INR 1 லட்சம் CR AUM ஐக் கடந்தது

**கோவை,செப்.04** மோதிலால் ஓஸ்வால் அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனம் தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள் ஆகஸ்ட் 26, நிலவரப்படி INR 1 லட்சம் கோடியைத் தாண்டி விட்டதாக அறிவித்துள்ளது. ஏப்ரல் 2014 முதல் ஆகஸ்ட் 2024 வரை, கடந்த 10 ஆண்டுகளில், MOAMC's AUM தன் வாடிக்கையாளர் தளத்தில் பெரிய வளர்ச்சி கண்டதால் 50 மடங்கு விரிவடைந்துள்ளது, இந்த AUM இப்போது இந்தியா முழுவதும் 200+ இடங்களில் இருந்து இயங்கும் 32 லட்சமாக உள்ளது. AUMஇப்போது அனைத்து தயாரிப்புகளிலும் 46 லட்சம் இயக்கத்தில் உள்ள ஃபோலியோக்களைக் கொண்டுள்ளது. MOAMC AUM இல், இயக்கத்தில் உள்ள மற்றும் இயக்கத்தில் இல்லாத விதி INR 71.8K Cr பங்களிக்கிறது.

(71.7%), அதனைத் தொடர்ந்து, PMS AUM INR 14.5K Cr. (14.5%) மற்றும் ALF INR 13.7K Cr. (13.7%) ஆகும். அதன் இயக்கத்தில் உள்ள Mutual funds AUM INR 47.1K Cr ஆகவும், இயக்கத்தில் இல்லாத Mutual funds AUM INR 27.8K Cr ஆகவும் உள்ளன. நிறுவனம் "அனைத்து Cat III AIF சேவை வழங்கல்களில் 7% பங்கையும், தொழில்துறையில் உள்ள அனைத்து விருப்பத் தேர்வான PMS வாடிக்கையாளர்களின் 6.5% பங்கையும் கொண்டுள்ளது. மோதிலால் ஓஸ்வால் அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் MD மற்றும் CEO,. பிரதீக் அகர்வால் பேசுகையில் "AUM இல் 1 லட்சம் கோடி என்ற மைல்கல்லை நாங்கள் எட்டியது, எங்களின் உயர் நம்பிக்கை போர்ட்ஃபோலியோ வியூகம், ஆற்றல் மிக்க இடர் மேலாண்மை நடைமுறைகள் மற்றும் எங்கள் செயல்முறைகளின் மேல் எங்கள் முதலீட்டாளர்கள் வைத்திருக்கும் அளப்பரிய நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது. AMC's AUM அல்லது ஏப்ரல் 23 முதல் ஆகஸ்டு 24 வரையிலான 17 மாதங்களில் ரூ. 50,000 கோடியிலிருந்து 1 லட்சம் கோடியாக வளர்ந்தது. இத்தகைய பிரமிக்க வைக்கும் வளர்ச்சியானது, எங்கள் முதலீட்டாளர்கள் எங்கள் மேல் ஒப்படைத்துள்ள ஒரு பொறுப்பாகும்

## ...வர்த்தக செய்திகள்...

கமர் ஃபிலிம் ஃபேக்டரி வழங்கும் '69ஆவது ஷோபா ஃபிலிம்பேர் விருதுகள் சவுத் 2024' நிகழ்ச்சி

# 'விஜய் சூப்பர்' தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பு!




**சென்னை,செப்.04:** தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாள சினிமாவின் பிரம்மாண்டமான கொண்டாட்டத்தை கமர் ஃபிலிம் ஃபேக்டரியுடன் (Kamar Film Factory) இணைந்து 69 ஆவது ஷோபா ஃபிலிம்பேர் விருதுகள் சவுத் 2024 (69th SOBHA Filmfare Awards South 2024) விருது வழங்கும் நிகழ்ச்சி 'விஜய் சூப்பர்' தொலைக்காட்சியில் வரும் செப்டம்பர் 7ஆம் தேதி மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஒளிபரப்பபபட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பிரனய் ராஜா (காதல் மன்னன்) என்று அழைக்கப்படும் ஸ்ரீநாத்திற்கு, தனது 57 ஆண்டு கால திரை வாழ்க்கை மற்றும் 300க்கும் மேற்பட்ட படங்களில் நடித்ததற்காக மதிப்புமிக்க வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதை கண்டு ரசிக்கலாம். சிறந்த நடிகருக்கான (விமர்சகர்கள்) விருதைப் பெறும் அதே வேளையில், விமர்சன ரீதியாகப் பாராட்டப் பட்ட தமிழ்த் திரைப் படமான 'சித்தா'வில் இருந்து 'உனக்கு தான்' என்கிற மறக்கமுடியாத பாடலை நடிகர் சித்தார்த் பாடுவதையும் பார்வையாளர்கள் காணலாம்.

இந்நிகழ்ச்சி செப்டம்பர் 1ஆம் தேதி மாலை 4:30 6:30 மணி வரை ஏசியாநெட் மூவீஸிலும் (மலையாளம்), செப்டம்பர் 7ஆம் தேதி மாலை 4 6 மணிக்கு விஜய் சூப்பரிலும் (தமிழ்), செப்டம்பர் 8ஆம் தேதி பிற்பகல் 3 5 மணி வரை ஸ்டார் சுவர்ணா பிளஸிலும் (கன்னடம்), செப்டம்பர் 8ஆம் தேதி மாலை 6 8 மணி வரை ஸ்டார் மா மூவீஸிலும் (தெலுங்கு) ஒளிப்பரப் பாகவுள்ளது. இவ்விழாவில் நான்கு திரைப்படத் துறைகளில் இருந்தும் நடிகர்கள், திரைப்படத் தயாரிப் பாளர்கள், எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள், ஒளிப்பதிவாளர்கள், எடிட்டர்கள் ஆகியோரின் பங்களிப்பு கௌரவிக்கப்படும்.

தமிழ் சினிமாவில் சிறந்த நடிகருக்கான (ஆண் மற்றும் பெண்) விருது முறையே விக்ரம் மற்றும் நிமிஷா சஜயன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. கன்னடத் திரையுலகில் சிறந்த நடிகைக்கான விருதை CI ரவிக் குமாரும், நடிகருக்கான விருதை ரக்ஷித் ஷெட்டியும்; தெலுங்கு சினிமாவின் சிறந்த நடிகர்களாக நானி மற்றும் கீர்த்தி சுரேஷ் ஆகியோரும்; மலையாள சினிமாவில் சிறந்த நடிகருக்கான விருதை மம்முட்டியும், சிறந்த நடிகைக்கான விருதை வின்சி அலோஷியஸும் பெற்றனர். இந்த நட்சத்திரங்கள் அனைவருக்கும் கடந்த ஆண்டில் அவர்களின் சிறந்த சாதனைகளுக்காக பிளாக் லேடி விருதைப் பெற்றுள்ளனர்.

# ஆல்நியூ ஸ்லேவியா மாண்டே கார்லோ அறிமுகம்

**கோவை,செப்.04:** ஸ்கோடா ஆட்டோ இந்தியா இந்தியாவில் ஆல்னியூ ஸ்லேவியா மாண்டே கார்லோ எடிஷனை அறிமுகப் படுத்தி உள்ளது. குஷாக் மற்றும் ஸ்லேவியா வரிசையில், ஆல்நியூ ஸ்போர்ட்லைன் ரகத்தையும் அறிமுகப் படுத்தி உள்ளது. வாடிக்கையாளர் விருப்பத்தின் விளைவாக, ஸ்கோடா ஆட்டோ இந்தியா நிறுவனம், தற்போது, குஷாக் மற்றும் ஸ்லேவியா மகிழுந்துகளின் கிளாசிக், சிக்னேசர், மாண்டே கார்லோ மற்றும் பிரெஸ்டிஜ் ரகங்களுக்கும் ஸ்போர்ட்லைனை அறிமுகப்படுத்தி உள்ளது. மாண்டே கார்லோ ரூ.15,79,000க் கும், ஸ்லேவியா ஸ்போர்ட்லைன் ரூ.14,05,000க்கும் குஷாக் ஸ்போர்ட்லைன் ரூ.14,70,000க்கும் கிடைக்கும். இந்த மகிழுந்தில் நன்கு பரிசோதிக்கப் பட்ட மற்றும் நிரூபிக்கப்பட்ட 1.0 மற்றும் 1.5 டிஎஸ்ஐ எஞ்சின்கள், 1.0 டிஎஸ்ஐ சிக்ஸ் ஸ்பீட் மேனுவல், அட்டோமேடிக் கியர்பாக்ஸ், 1.5 டிஎஸ்ஐ டர்போ சார்ஜ்ட் பெட்ரோல் எஞ்சின், ஏழு ஸ்பீட் டிஎஸ்ஜி ஆட்டோமேடிக் கியர்பாக்ஸ் பிரத்யேக டொர்னாடோ ரெட் மற்றும் கேண்டி ஒயிட் வண்ணங்களில் கிடைக்கும். ஓஅர்விஎம் களைப்போலவே, விண்டோ கார்னிஷும் முழுக் கருப்பு கருப் பொருளைக் கொண்டுள்ளது. கருப்பு உட்புறங்களை வழங்குவதற்கு உட்புறத்தே சிவப்பு வண்ணத்தில் நுட்பமான சாய்வுக் கோடுகளும் உள்ளன. குஷாக் மற்றும் ஸ்லேவியா ஆகிய இரண்டின் ஸ்போர்ட்லைன் டிரிம், மாண்டே கார்லோவின் டெயில்லைட், ஏரோ கிட் மற்றும் பிறவற்றிலிருந்து பிளாக் அவுட் வடிவமைப்பை பெறுகின்றன. குஷாக் மற்றும் ஸ்லேவியா மகிழுந்துகளிலுள்ள ஸ்போர்ட்லைன் எல்இடி முகப்பு விளக்கு, டிஆர்எல் விளக்கு,ஆறு ஏர்பேக்குகள், ஸ்போர்ட்டி டிரிம் இல், மின்சார சன்ரூஃப், அல்லாய் ஃபுட் பெடல்கள், இணைப்பு டாங்கிள், ரெயின் ஸென்கிங்க் வைப்பர், ஆட்டோ டிம்மிங்க் இண்டர்னல் ரியர் வியூ கண்ணாடி உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளன என ஸ்கோடா செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

# சுரண்டை எஸ்.ஆர்.ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் கலைத்திறன் போட்டி




**தென்காசி,செப்.04** தென்காசி மாவட்டம், சுரண்டை எஸ்.ஆர் ஸ்கூல் ஆஃப் எக்ஸலன்ஸ் பள்ளியில் "மிராக்கிள் 2024" கலைத்திறன் போட்டி நடந்தது. நிகழ்ச்சிக்கு குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனர் சிவபபிஸ்ராம் தலைமை தாங்கினார். பள்ளி செயலர் சிவ டிப்ஜினிஸ்ராம், பள்ளி முதல்வர் பொன் மனோன்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை ஆசிரியர் மாரிக்கனி அனைவரையும் வரவேற்றார். பள்ளிமுதல்வர் பொன்மனோன்யா குத்துவிளக்கேற்றி போட்டிகளை தொடங்கி வைத்தார். மாறுவேடம் , வண்ணம் தீட்டுதல் , நினைவாற்றல் , குழு நடனம் , கிராமிய நடனம், பேச்சுப்போட்டி, களிமண்ணில் கலைநயம் , வார்த்தைகளை எழுதுதல், மேற்கத்திய நடனம் , சுவரொட்டி தயாரித்தல், தமிழ் கட்டுரை போட்டி , ஒட்டியும் வெட்டியும் பேசுதல் , கூந்தல் அலங்காரம், பென்சில் ஓவியம் , இந்திய கலாச்சார ஆடை அலங்காரம், பாரம்பரிய உணவு தயாரித்தல், கண்ணாடியில் வண்ணம் தீட்டுதல் , பொம்மை அலங்காரம் , விளம்பர நடிப்பு, வினாடி வினா உள்ளிட்ட கலைத்திறன் போட்டிகள் நடந்தது. இப்போட்டியில் தென்காசி மாவட்டத்தை சேர்ந்த பள்ளிகளான குற்றாலம் ஸ்ரீ பராசக்தி வித்யாலயா, தேன் பொத்தை செயின்ட் ஜோசப், தன்னூத்து செயின்ட் ஜோசப், வீரமாமுனிவர் ஆர்.சி பள்ளி , விஸ்டம் மெட்ரிக் விஸ்டம் நர்சரி பிரைமரி , ஸ்ரீ பாரத் கண்ணா பப்ளிக் பள்ளி, சிவசக்தி வித்யாலயா, ஸ்பெக்ட்ரம் மெட்ரிக் மற்றும் இராஜேந்திரா விஸ்டம் உள்ளிட்ட பல்வேறு பள்ளியில் உள்ள மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். சீனியர் பிரிவில் தேன்பொத்தை செயின்ட் ஜோசப் பள்ளி அணியினர் முதலிடமும், இசக்கி வித்யாஸ்ரம் அணியினர் இரண்டாமிடமும், சிவசக்தி வித்யாலயா அணியினர் மூன்றாம் இடமும் பெற்றனர். சீனியர் பிரிவில் சிவசக்தி வித்யாலயா அணியினர் முதலிடமும், பண்பொழி சென் ஜோசப் அணியினர் இரண்டாம் இடமும், மகரிஷி வித்யாமந்திர் அணியினர் மூன்றாம் இடமும் பெற்றனர். வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பாராட்டு சான்றிதழ் கேடயம் பரிசாக வழங்கப்பட்டது.

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மதுராந்தகம்**

அந்தோணியம்மாள்
க/பெ. மகிமைதாஸ்,
நெ .58,டேங்க் தெரு,
கருங்குழி (அஞ்சல் ),
K.K.புதூர் கிராமம்,
மதுராந்தகம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம் 603303.
...மனுதாரர்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
மதுராந்தகம்.
...எதிர்மனுதாரர்

**பொது அறிவிப்பு**

மனுதாரரின் மாமனார் திரு . ஆரோக்கியசாமி த/பெ. ராயப்பன் என்பவர் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கருங்குழிஅஞ்சல், K.K.புதூர் 02.02.1994 அன்று தனது 65வது வயதில் இறந்துவிட்டார். இவரின் இறப்பினை எதிர் மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் குறிப்பிட்ட காலத்தில் அறியாமை காரணமாக பதிவு செய்யவில்லை. காலதாமதத்திற்கு மன்னிப்பு கோரியும், மேற்படி இறப்பினை பதிவு செய்ய உத்தரவிட கோரியும் மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் கனம் தீர்ப்பாயத்தில் நேரிலோ வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி இந்த அறிவிப்பினை கண்ட ஏழு நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ளலாம்.

**மனுதாரர்**
**அந்தோணியம்மாள்**
**க/பெ. மகிமைதாஸ்,**
**நெ .58,டேங்க் தெரு,**
**கருங்குழி (அஞ்சல் ),**
**K.K.புதூர் கிராமம்,**
**மதுராந்தகம் வட்டம்,**
**செங்கல்பட்டு மாவட்டம் 603303.**
**செல் : 9629448561**

---

**வருவாய் கோட்டாட்சியர் சிவகாசி.**

அ.சாந்தி (வயது 53/2024)
க/பெ. அழகர்சாமி,
175, பெரிய சுரைக்காய்பட்டி தெரு,
இராஜபாளையம் டவுண்,
இராஜபாளையம் தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.
...மனுதாரர்
/எதிரிடை/
1)வருவாய் கோட்டாட்சியர்,
சிவகாசி .
2)வருவாய்வட்டாட்சியர்,
இராஜபாளையம்.
...எதிர் மனுதாரர்கள்

**அறிவிப்பு**

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன்.எனது தாயார் வடிவம்மாள் என்பவர் கடந்த 07.05.2005 ஆம் தேதியில் விருதுநகர் மாவட்டம்,இராஜபாளையம் தாலுகா, இராஜபாளையம் டவுண்,பெரிய சுரைக்காய்பட்டி தெரு,கதவு எண் 175 என்ற விலாசத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்தார் .மேற்படி அவரது இறப்பினை பதிவு செய்ய உத்திரவிட வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன் .அம்மனு மீதான வாய்தவும்,விசாரணையும் மேற்படி வருவாய் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்,சிவகாசி முன்பாக நடைபெறுகிறது .இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

**அ.சாந்தி**
**மனுதாரர்**

---

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை.**
**கடிதம் எண் அ2/2236/2024**

கங்கா
க/பெ.சின்னையன்
204 அண்ணா நகர் நடுத்தெரு
நவம்பட்டு கிராமம்
திருவண்ணாமலை வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட
நிர்வாக நடுவர் /வருவாய்
கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் கங்கா என்பவரது கணவர் சின்னையன் 19.07.1990 திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் நவம்பட்டு கிராமத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்கபட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**கங்கா**
**க/பெ சின்னையன்**
**204 அண்ணா நகர்**
**நடுத்தெரு**
**நவம்பட்டு கிராமம்**
**திருவண்ணாமலை வட்டம்**
**திருவண்ணாமலை**
**மாவட்டம்**

---

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை.**
**கடிதம் எண் அ2/7316/2023**

மணி, த/பெ.பாலகிருஷ்ணன்
884 வெள்ளக்குளம்
கீக்களூர் புரவடை
கீக்களூர் கிராமம்
கீழ்பென்னாத்தூர் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட
நிர்வாக நடுவர் /வருவாய்
கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் மணி என்பவரது தந்தை பாலகிருஷ்ணன் 29.12.2015 திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் கீக்களூர் புரவடை கிராமத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்க பட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**மணி**
**த/பெ பாலகிருஷ்ணன்**
**884 வெள்ளக்குளம்**
**கீக்களூர் புரவடை**
**கீக்களூர் கிராமம்**
**கீழ்பென்னாத்தூர் வட்டம்**
**திருவண்ணாமலை**
**மாவட்டம்**

---

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை.**
**கடிதம் எண் அ2/9315/2022**

உம்மேஅபீபா
க/பெ.பாபுலால்
188 சர்தார் காம்ப்ளக்ஸ் பின்புறம்
செங்கம் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம் .
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட
நிர்வாக நடுவர் /வருவாய்
கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் உம்மே அபீபா என்பவரது சகோதரர் அப்துல்லா பாஷா 20.8.2016 திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் 188 சர்தார் காம்ப்ளக்ஸ் பின்புறம் செங்கம் நகரம் என்ற விலாசத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்கபட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**உம்மேஅபீபா**
**க/பெ. பாபுலால்**
**188 சர்தார் காம்ப்ளக்ஸ்**
**பின்புறம்**
**செங்கம் வட்டம்**
**திருவண்ணாமலை**
**மாவட்டம்**

---

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை.**
**கடிதம் எண் அ2/3863/2023**

ஆரோக்கியதாஸ்
த/பெ.ஆரோக்கியசாமி
263 மாதாகோவில் தெரு
மருத்துவம்பாடி கிராமம்
திருவண்ணாமலை வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட
நிர்வாக நடுவர் /வருவாய்
கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் ஆரோக்கியதாஸ் என்பவரது தந்தை ஆரோக்கியசாமி 27.7.2020 திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் மருத்துவம்பாடி கிராமத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்கபட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**ஆரோக்கியதாஸ்**
**த/பெ.ஆரோக்கியசாமி**
**263 மாதாகோவில் தெரு**
**மருத்துவம்பாடி கிராமம்**
**திருவண்ணாமலை வட்டம்**
**திருவண்ணாமலை**
**மாவட்டம்**

---

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை.**
**கடிதம் எண் அ2/1172/2024**

பவுன்குமார்
த/பெ.(லேட்)அண்ணாமலை
164 கண்ணக்குருக்கை கிராமம்
செங்கம் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட
நிர்வாக நடுவர் /வருவாய்
கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் பவுன் குமார் என்பவரது பெரியப்பா கரி நாயக்கர் 28.06.2009 திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் கண்ணக்குருக்கை கிராமத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்கபட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**பவுன்குமார்**
**த/பெ.(லேட்)அண்ணாமலை**
**164 கண்ணக்குருக்கை**
**கிராமம்**
**செங்கம் வட்டம்**
**திருவண்ணாமலை**
**மாவட்டம்**

---

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருவண்ணாமலை.**
**கடிதம் எண் அ2/4200/2024**

கமலா
க/பெ.(லேட்)சேவு
தாழையூத்து மதுரா
போயம்பள்ளி தண்டா கிராமம்
செங்கம் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.
...மனுதாரர்
மாண்பமை உட்கோட்ட
நிர்வாக நடுவர் /வருவாய்
கோட்டாட்சியர்
திருவண்ணாமலை
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் கமலா என்பவரது கணவர் சேவு 29.12.2015 திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் தாழையூத்து மதுரா போயம்பள்ளி தண்டா கிராமத்தில் இறந்தார் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனு நாள் 9.7.2024 அன்று வாய்தா குறிக்கபட்டுள்ளது இதன் மீது எவருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் ஒரு வாரத்திற்குள் ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறியவும்.

**கமலா**
**க/பெ (லேட்)சேவு**
**தாழையூத்து மதுரா**
**போயம்பள்ளி தண்டா**
**கிராமம்**
**செங்கம் வட்டம்**
**திருவண்ணாமலை**
**மாவட்டம்**

---

**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள். பொன்னேரி.**
**ந.க.எண்.319/2024**

சொக்கம்மா
க/பெ மணி (லேட்),
எண்.38, பெருமாள் கோயில்
தெரு, கோளூர்,
பொன்னேரி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்
...மனுதாரர்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர்
அவர்கள்,
பொன்னேரி வட்டம்.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய எனது கணவர் E.மணி த/பெ ஏழுமலை, என்பவர் கடந்த 02/06/2023 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எனது கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதால் தற்போது இறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன்.இதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும்.

**சொக்கம்மா**
**மனுதாரர்.**

---

**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள். பொன்னேரி.**
**ந.க.எண்.360/2024**

B.செல்வம்
த/பெ பலராமன்,
எண்.107,பெருமாள் கோயில் தெரு,
பண்டி காவனூர் கிராமம்,
அழிஞ்சி வாக்கம் அஞ்சல்,
பொன்னேரி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்
...மனுதாரர்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
பொன்னேரி வட்டம்.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய எனது தாத்தா B.கந்தசாமி த/பெ பாபு ரெட்டி, என்பவர் கடந்த 08/02/1986 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எனது கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதால் தற்போது இறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன்.இதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும்.

**B.செல்வம்**
**மனுதாரர்.**

---

**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள். பொன்னேரி.**
**ந.க.எண்.336/2024**

சரிதா க/பெ நாகவேல்,
எண்.03,பவானி அம்மன்
கோயில் தெரு,
பெரும்பேடு கண்டிகை,
பெரும்பேடு அஞ்சல்,
பொன்னேரி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்
...மனுதாரர்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
பொன்னேரி வட்டம்.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய எனது மகன் அரவிந்த் குமார்.N. த/பெ.நாகவேல், என்பவர் கடந்த 05/03/2000 அன்று மேற்படி முகவரியில் பிறந்ததை எனது கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதால் தற்போது பிறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர்அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன்.இதில் யாருக்கேனும் ஆட்சேபனை யிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும்.

**சரிதா**
**மனுதாரர்**

---

**மாண்புமிகு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள். பொன்னேரி.**
**ந.க.எண்.235/2022**

ஹபிப் உன்னிசா
க/பெ ரஹமத் உல்லாஹ் ,
எண்.32/40, முத்தையா தெரு,
ராயப்பேட்டை, சென்னை14
...மனுதாரர்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
பொன்னேரி வட்டம்.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய எனது கணவர் R.S.ரஹமத் உல்லாஹ் த/பெ.அப்துல் ரசாக், என்பவர் கடந்த 26/06/2020 அன்று 5/209, அண்ணா தெரு, ஆட்டந்தாங்கல்,சென்னை52, பொன்னேரி வட்டம்,திருவள்ளூர் மாவட்டம் என்ற முகவரியில் இறந்ததை எனது கவனக்குறைவால் பதிவு செய்யாமல் விட்டுவிட்டதால் தற்போது இறப்பினை பதிவு செய்ய வேண்டி மாண்புமிகு பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன்.இதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரிவிக்கவும்.

**ஹபிப் உன்னிசா**
**மனுதாரர்.**

---

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.**
**சி.ப.வ.எண்:அ6/17/2024**

திருமதி.வசந்த மலர்
க/பெ.சுப்ரமணியன்.
சேஷசமுத்திரம் கிராமம்,
சங்கராபுரம் வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
...மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் வசந்த மலர் என்கிற நான், எனது மகன் அரசு என்பவர் கடந்த 23/08/2008 அன்று சங்கராபுரம் வட்டம், சேஷசமுத்திரம் கிராமத்தில் பிறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால் மேற்படி எனது மகன் அரசு பிறப்பு சான்றிதழ் அரசு சார்ந்த துறைகளில் சமர்ப்பிக்க தேவைப்படுவதால் மேற்படி எனது மகன் அரசு பிறப்பு சான்றிதழ் கேட்டு கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள் ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து வடிவமாகவோ இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று ஒருதலைபட்சமாக பாவித்து சான்றிதழ் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**நேர்முக உதவியாளர்,**
**வருவாய் கோட்டாட்சியர்**
**அலுவலகம்,**
**கள்ளக்குறிச்சி.**

---

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.**
**சி.ப.வ.எண்:அ6/49/2024**

திருமதி.சுசீலா
க/பெ.பாலு.
பரங்கிநத்தம் கிராமம்,
சின்னசேலம் வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
...மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் சுசீலா என்கிற நான், எனது மகன் கோகுல் என்பவர் கடந்த 27/12/2007அன்று சின்னசேலம் வட்டம், மல்லியம்பாடி கிராமத்தில் பிறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால் மேற்படி எனது மகன் கோகுல் பிறப்பு சான்றிதழ் அரசு சார்ந்த துறைகளில் சமர்ப்பிக்க தேவைப்படுவதால் மேற்படி எனது மகன் கோகுல் பிறப்பு சான்றிதழ் கேட்டு கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள் ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து வடிவமாகவோ இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று ஒருதலைபட்சமாக பாவித்து சான்றிதழ் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**நேர்முக உதவியாளர்,**
**வருவாய் கோட்டாட்சியர்**
**அலுவலகம்,**
**கள்ளக்குறிச்சி.**

---

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.**
**சி.ப.வ.எண்:அ6/107/2024**

திரு.அருள்
த/பெ.பச்சமுத்து.
விளம்பார் கிராமம்,
கள்ளக்குறிச்சி வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
...மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் அருள் என்கிற நான், எனது தாத்தா பெரியசாமி என்பவர் கடந்த 13/03/2008 அன்று கள்ளக்குறிச்சி வட்டம், விளம்பார் கிராமத்தில் இறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால்மேற்படிஎனது தாத்தா பெரியசாமி இறப்பு சான்றிதழ் அரசு சார்ந்த துறைகளில் சமர்ப்பிக்க தேவைப்படுவதால் மேற்படி எனது தாத்தா பெரியசாமி இறப்புசான்றிதழ்கேட்டுகள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள் ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து வடிவமாகவோ இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று ஒருதலைபட்சமாக பாவித்து சான்றிதழ் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**நேர்முக உதவியாளர்,**
**வருவாய் கோட்டாட்சியர்**
**அலுவலகம்,**
**கள்ளக்குறிச்சி.**

---




விளம்பரம்

**விவேகம் டிராவல்ஸ்**
136, ஜி.சி.ரோடு, தூத்துக்குடி- 628 001
போன்: 0461-2324962
தினசரி காலை 9.30 மணிக்கு
சென்னை To கோவை
தினசரி இரவு 10 மணிக்கு
சென்னை To தூத்துக்குடி
VOLVO BUS A/C SEATER
கோயம்பேடு: 24795099, 24790789
எக்மோர்: 28193402, 28193432, 28191601
E-Booking: vivegam.in/redbus.in,







---

# ஒசூர் மாநகர தி.மு.க., பொது உறுப்பினர்கள் கூட்டம்



ஒசூர், செப். 4–

ஒசூர் மாநகர தி.மு.க., பொது உறுப்பினர்கள் கூட்டம் தளி சாலையில் உள்ள காலி இடத்தில் நேற்று நடந்தது. மாநகர அவைத்தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்தார். பொருளாளர்தியாகராஜ்வரவேற்றார். மேற்கு மாவட்ட செயலாளரும், ஒசூர் எம்.எல்.ஏ.வுமான பிரகாஷ் ஒசூர் மாநகர செயலாளர் மேயர் சத்யா ஆகியோர் கட்சி நிர்வாகிளுக்கு ஆலோசனைகள் வழங்கி பேசினர். மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை செயலாளர்விஜயகுமார், மேற்கு மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், பொருளாளர் சுகுமார், துணை மேயர் ஆனந்தய்யா, மாநகராட்சி பொது சுகாதார குழு தலைவர் மாதேஸ்வரன், வரி விதிப்பு குழு தலைவர் சென்னீரப்பா, மாணவரணி மாவட்ட அமைப்பாளர் கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லோராமணி, பகுதி செயலாளர் ராமு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஊத்தங்கரையில் தளபதி விஜய் மக்கள் இயக்கம் சட்டமன்றத் தொகுதி சார்பாக கோட் திரைப்படத்தின் ஸ்டிக்கர் மற்றும் வால் போஸ்டர் வழங்கல்



ஊத்தங்கரை செப்:04

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த சென்னப்பன் நாயக்கனூரில் தளபதி விஜய் மக்கள் இயக்கம் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதியின் சார்பாக தொகுதி ஒருங்கிணைப்பாளர் இரா,தாமோதரன், தொகுதி துணை ஒருங்கிணைப்பாளர் ஜெ,தர்மன், மத்தூர் ஒன்றிய தலைவர் வி,திருமூர்த்தி தலைமையில் தளபதி விஜய் அவர்களின் G.O.A.T திரைப்படத்தின் ஸ்டிக்கர் மற்றும் வால்போஸ்டர் ஊத்தங்கரை சட்டமன்றத்திற்கு உட்பட்ட ஊத்தங்கரை ஒன்றியம், பேரூராட்சி, மற்றும் மகளிர் அணி மற்றும் அனைத்து ஊராட்சி பொறுப்பாளர்கள் கழக நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டது,

**உள்ளாட்சி சாரல் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறவும்**

**குமரன் பிரிண்டர்ஸ்**
தினசரி நாளிதழ், வார இதழ், மாத இதழ்
குறைந்த விலையில்
தரமான முறையில் அச்சடித்து தரப்படும்.
தொடர்புக்கு
CMDA, Flat No.D28, Terminal complex,
Madhavaram,Chennai - 600110.
செல் : 7904165557




**உள்ளாட்சி சாரல்**
காலை நாளிதழ்
காலை நாளிதழ் உள்ளாட்சி சாரல் நியூஸ் பேப்பரில் ஆட்கள் தேவை, மணப்பந்தல், ரியல் எஸ்டேட், பைனான்ஸ், ஜோதிடம், மாந்திரிகம், கல்வி, பிறந்த நாள் வாழ்த்து மற்றும் இதர செய்தி போன்ற விளம்பர தொடர்புக்கு
தொடர்புக்கு
8015099090

# “டெங்கு பாதிப்பு அதிகரிக்கும் அபாயத்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் துரிதம்” – அமைச்சர் மா.சுப்பிரமணியன்

திருச்சி, செப்.04:

தமிழகத்தில் டெங்கு காய்ச்சலின் பாதிப்பு 11 ஆயிரத்தை கடந்துள்ளது. இருப்பினும் இறப்பு எண்ணிக்கை 4 பேர் என்ற அளவில் தான் உள்ளது. வரும் மாதங்களில் டெங்கு பாதிப்பு அதிகரிக்கக் கூடும் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப் பட்டு வருவதாக தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.



திருச்சி விமான நிலையத்தில் குரங்கு அம்மை தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகள் குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார், மேயர் மு.அன்பழகன் மற்றும் சுகாதாரத் துறை, விமான நிலைய அதிகாரிகள் உடனிருந்தனர்.

ஆய்வுக்கு பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் பேசுகையில்: "தமிழ்நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையங்களில் குரங்கு அம்மை தடுப்பு நடவடிக்கையாக வெளி நாடுகளில் இருந்து வரும் பயணிகளை வெப்பத்தை அளவிடும் கருவிகள் மூலம் பரிசோதனை செய்து வருகிறோம். தமிழ்நாட்டில் உள்ள சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய நான்கு பன்னாட்டு விமான நிலையங்களில் தொடர்ச்சியாக சோதனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்துக்குநாளொன்றுக்கு சராசரியாக 58 லிருந்து 64 சர்வதேச விமானங்கள்வருகின்றன. அந்த வகையில் இதுவரை 26 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பயணிகளை சோதனை செய்துள்ளோம். சர்வதேச விமான நிலையங்கள் உள்ள நான்கு மாவட்டங்களிலும் உள்ள அரசு மருத்துவமனைகளில் குரங்கு அம்மை சிகிச்சைக்காக பிரத்யேக வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் டெங்குவின் பாதிப்பு அதிக அளவில் இருக்கிறது. மாதா மாதம் மழை பெய்வதால் எட்டு மாதங்களில் டெங்குவின் பாதிப்பு 11 ஆயிரத்தை கடந்துள்ளது. என்றபோதும் இறப்பு மிகவும் குறைவாக தான் உள்ளது. இந்த ஆண்டு நான்கு பேர் மட்டுமே டெங்கு பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். வரும் நாட்கள் மழை காலம் என்பதால் டெங்குவின் பாதிப்பு அதிகரிக்கக் கூடும்.

எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து மக்கள் நல்வாழ்வுத்துறை, நகராட்சி நிர்வாகத் துறை உள்ளிட்ட 11 துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையில் காலியாக உள்ள ஆய்வக நுட்புநர் உள்ளிட்ட காலி பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். தடை செய்யப்பட்ட மருந்துகள் விற்பனை செய்யப்படுவதை தடுக்க அதிகாரிகள் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திருச்சியில் நூடுல்ஸ் சாப்பிட்டு ஒரு சிறுமி உயிரிழந்ததாக கூறப்பட்டதையடுத்து சைனீஸ் நூடுல்ஸ் மொத்த விற்பனை செய்யும் நிறுவனத்தில் ஆய்வு செய்யப் பட்டது. அந்தச் சிறுமி ஆன்லைனில் நூடுல்ஸ் வாங்கி இருந்தாலும் கடையில் ஆய்வு செய்யப்பட்டு அங்கு, காலாவதியான 800 கிலோ பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற புகார்கள் வந்தால் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது" என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

# லாங்குவேஜ் பில்லரின் லாங்கதான் 2K24 மாநில அளவிலான திறன் போட்டி






வேலூர்,செப்.04: வேலூர் மாவட்டம் ,வேலூரைத் தலைமை இடமாகக் கொண்டு இயங்கி வரும் லாங்குவேஜ் பில்லரின் லாங்கதான் 2k24 நிகழ்ச்சி வெற்றிகரமாக வேலூர் ஏ. கே. எம் மஹாலில் நடைபெற்றது. இதில் 65க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பல்வேறு கட்டங்களாகப் போட்டிகள் நடத்தப்பட்டன. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளில் போட்டிகள் நடத்தப் பட்டன. இந்த விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக விஐடி பல்கலைக் கழகத்தின் உதவி துணைத் தலைவர் செல்வி கதம்பரி ச. விஸ்வநாதன் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் கோப்பைகளை வழங்கினார். இதில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன. இந்த லாங்கதான் 2k24ல் பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. அதில் ஃபோனிக்ஸ் சேலஞ்ச், பப்ளிக் ஸ்பீக்கிங், எங் ஆத்தர், டிசைன் திங்கிங், டிரீம் ஐ ஏ எஸ், யூனிக் டலன்ட் ஃபெஸ்ட், லாங்குவேஜ் பிரண்ட்லி போன்ற போட்டிகள் நடைபெற்றன. மேலும், இந்த விழாவில் பிற மொழிகளை கற்பதன் முக்கியத்துவத்தினை சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். இந்த நிகழ்வில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பங்கு பெற்றதற்கான சான்றிதழ்களையும் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இது போன்ற போட்டிகளில் பங்கு கொள்வதன் மூலம் தங்களுடைய பிள்ளைகளின் தன்னம்பிக்கை அதிகரிப்பதாகப் பெற்றோர்கள் தெரிவித்தனர். லாங்குவேஜ் பில்லர் கல்வி நிறுவனம் வேலூரில் மூன்று கிளைகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதில் பல பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம். பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் குறித்து பத்திரிக்கை தொலைக்காட்சி ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி கூட்டத்தில் உரையாற்றினார்கள். உடன் மாவட்ட சமூக நலன் அலுவலர் வசந்தி ஆனந்தன் (பொறுப்பு). துணை காவல் கண்காணிப்பாளர். சந்திரலேகா, (பயிற்சி) இலவச சட்ட உதவி - சமரச மையம் குழு வழக்கறிஞர் சங்கரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அசோக், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை உதவி திட்ட திட்ட அலுவலர் மரு. கோமதி, ஒருங்கிணைந்த சேவை மைய நிர்வாகி மலர்விழி மற்றும் பலர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், செங்குட்டை ஆர். கே .பில்டர்ஸ் அலுவலகம் வளாகத்தில் மாதம்தோறும் அமாவாசை மற்றும் பௌர்ணமி ஆகிய நாட்களில் தொடர்ந்து பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கி கொண்டிருக்கும் வேலூர்மாநகராட்சி 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் அன்பு ஆவணி மாதம் அமாவாசை தினத்தையொட்டி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். இதில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சேலம் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது.

## சமூக தொழில் முனைவோர் முயற்சியின் செயல் திறன் கருத்தரங்கு

# மாணவிகள் தங்களுடைய படைப்பாற்றல், புதுமையான எண்ணங்களுடன் சமூக அக்கறையுள்ள தொழில் முனைவோர்களாக மாற வேண்டும்

**எத்தியோப்பியா ஹவாசா பல்கலைக்கழக கூட்டுறவு துறை பேராசிரியர் டாக்டர் கருணாகரன் பேச்சு**




திருப்பூர்,செப்.04: திருப்பூர், வஞ்சிபாளையம் தீரன் சின்னமலை மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் வணிகவியல் மற்றும் மேலாண்மை துறை சார்பில் பன்னாட்டு கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடந்தது. கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் டாக்டர் ரேச்சல் நான்சி பிலிப் தலைமை தாங்கினார். சமூகத் தொழில் முனைவோர் முயற்சியின் செயல் திறன் என்ற தலைப்பில் ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள எத்தியோப்பியா நாட்டைச் சேர்ந்த ஹவாசா பல்கலைக்கழக கூட்டுறவு துறை பேராசிரியர் டாக்டர் கருணாகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். அப்பொழுது அவர் பேசியதாவது :

இன்றைய சூழலில் தொழில்கள் அனைத்தும் லாபத்தையும், பங்குதாரர்களையும் மட்டுமே மையமாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அணுகு முறையின் காரணமாக இடைத்தரகர்கள் மட்டுமே பயன் பெறுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். தொழில் முனைவோர்கள் தங்களுக்கான சமூக அக்கறையுடன் செயல்பட வேண்டும். ஒவ்வொரு தொழிலும் சமூக பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். உதாரணமாக மனிதன் உயிர் கொல்லியான புற்று நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் ஒரு நிறுவனம் சமூக அக்கறையுடன் செயல்படுகிறது என்றே கூறலாம்.

ஒவ்வொரு தொழில் நிறுவனங்களும் ஐக்கிய நாடுகள் சபை வகுத்த வளங்குன்றா இலக்குகளை நோக்கி செயல்பட வேண்டும். அதாவது, வறுமை இன்மை, பசி ஒழிப்பு, அனைவருக்கும் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, அனைவருக்கும் தரமான கல்வி, மலிவான மற்றும் சுத்தமான ஆற்றல் போன்ற இலக்குகளை அடைய தொழில் முனைவோர் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். சமூகத் தொழில் முனைவோர் பட்டியலில் இந்தியா 14 வது இடத்தில் உள்ளது.

குறிப்பாக இதில் பெண்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது. இலவசமாக கண் அறுவை சிகிச்சை செய்யும் அரவிந்த் கண் மருத்துவமனை, மலைவாழ் கிராமங்களுக்கு இலவசமாக சூரிய விளக்குகளை வழங்கிக் கொண்டிருக்கும் டி லைட், இலவச கொசுவலைகளை கிராமங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் டம்பம் போன்ற தன்னார்வ நிறுவனங்களை போல் மாணவிகளும் தங்களுடைய படைப்பாற்றல் களையும், புதுமை எண்ணங்களையும் கொண்டு ஒவ்வொருவரும் சமூக அக்கறையுள்ள தொழில் முனைவோர்களாக மாற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் வணிகவியல் துறை வணிகம் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறை, வணிகம் மற்றும் தொழில் பகுப்பாய்வுத் துறை, வணிக மேலாண்மை துறை மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர். கருத்தரங்கில், கல்லூரி பேராசிரியர்கள் காயத்ரி, கற்பகவல்லி, பூரணிமா வீ சந்திரகலா, கவிதா மற்றும் மோகன்ராஜ் ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் வணிகவியல் துறைத் தலைவர் காயத்ரி நன்றி கூறினார்.

## மறியலை தடுக்க முயன்ற பெண் டிஎஸ்பி மீது தாக்குதல்

# அருப்புக்கோட்டையில் எஸ்.பி. நேரில் விசாரணை



விருதுநகர்,செப்.04: விருதுநகர் மாவட் டம் அருப்புக்கோட்டை யில் சாலை மறியலை தடுக்க முயன்ற பெண் டிஎஸ்பியின் தலைமுடியைப் பிடித்து இழுத்து சிலர் தாக்குதல் நடத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இச்சம்பவம் குறித்து எஸ்பியான கண்ணன் நேரடி விசாரணை நடத்தினார். ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே பெருமாள்தேவன் பட்டியைச் சேர்ந்த மினி லார் ஓட்டுநர் காளிகுமார் (33). இவர், நேற்று (செப்.2) தனது மினி லாரியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் குழாய் பதிப்பதற்கான உதிரி பாகங்களை ஏற்றிக்கொண்டு திருச்சுழி நோக்கி வந்துகொண்டிருந்தார். திருச்சுழி ராமேஸ்வரம் சாலையில் கேத்தநாயக்கன்பட்டி விலக்கு அருகே வந்தபோது, 2 பைக்குகளில் வந்த மர்ம நபர்கள் 5 பேர் மினி லாரியை நிறுத்தி காளி குமாரை சரமாரியாத் தாக்கி அரிவாளால் வெட்டிக் கொலை செய்தனர். காளிகுமாரின் உடல் பிரேத பரிசோதனைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக, காளீஸ்வரன், அருண்குமார், லட்சுமணன், பாலமுருகன், வீரசூரன், வேல்முருகன் ஆகிய 6 பேர் மீது திருச்சுழி போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். அருப்புக்கோட்டை அரசு மருத்துவ மனையில் காளிகுமாரின் உடல் செவ்வாய்க் கிழமை பிரேத பரிசோதனை செய்யப் படவிருந்த நிலையில், அவரது உறவினர்கள் ஏராளமானோர் அருப்புக்கோட்டை அரசு மருத்துவ மனையில் குவிந்தனர். கொலையாளிகளை உடனே கைது செய்யக்கோரி அவர்கள் அரசு மருத்துவமனை முன்பு சாலை மறியலில் ஈடுபட முயன்றனர்.

அருப்புக்கோட்டை டிஎஸ்பியான காயத்ரி தலைமையிலான போலீஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் ஆத்திர மடைந்த சிலர் டிஎஸ்பி காயத்ரியை தள்ளிவிட்டு, அவரது தலைமுடியைப் பிடித்து இழுத்து தாக்கினர். இதனால், போலீஸாரும் மறியலில் ஈடுபட முயன்றவர்களும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. மேலும், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் போலீஸாரை கண்டித்து திருச்சுழி சாலையில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவலறிந்த எஸ்பியான கண்ணன் சம்பவ இடத்துக்கு வந்து நேரடி விசாரணை நடத்தினார். டிஎஸ்பி தாக்கப்பட்டது தொடர்பாக குமார், பொன்குமார் உள்ளிட்ட 4 பேரை பிடித்து போலீஸார் தீவிர விசாரணை நடத்தினர். பின்னர், டிஎஸ்பியான காயத்ரி மீது தாக்குதல் நடத்திய ராமநாதபுரம் அருகே உள்ள நெல்லிகுளத்தைச் சேர்ந்த பாலமுருகன் (43) என்பவரை கைது செய்தனர். மேலும், மினி லாரி ஓட்டுநர் காளிகுமார் கொலை வழக்கில் காளீஸ்வரன், அருண்குமார், லட்சுமணன், பாலமுருகன் ஆகியோரையும் போலீஸார் இன்று கைதுசெய்தனர். தலைமறைவாக உள்ள வீரசூரன், வேல்முருகன் ஆகிய இருவரையும் போலீஸார் தேடி வருகின்றனர்.

# விளையாட்டு செய்திகள்

## பாராலிம்பிக்கில் வெண்கலம் தமிழக வீராங்கனை நித்யஸ்ரீ சிவனுக்கு அமைச்சர் உதயநிதி வாழ்த்து




பாராலிம்பிக் பேட்மிண்டன் போட்டியில் வெண்கலம் வென்ற தமிழக வீராங்கனை நித்யஸ்ரீ சிவனுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ''பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் பாராலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொண்டு பேட்மிண்டன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் வெண்கலம் பதக்கம் வென்ற தமிழக வீராங்கனை நித்யஸ்ரீ சிவனுக்கு எனது வாழ்த்துகள்.

பாராலிம்பிக் போட்டிகளில் பேட்மிண்டன் பிரிவில் இந்தியா வென்றுள்ள 5 பதக்கங்களில் 3 தமிழக வீரர்களால் பெறப்பட்டுள்ளது. பாராலிம்பிக்கில் தமிழக தடகள வீரர்களின் வரலாற்று சாதனைகளால் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் தொடர்ந்து கலந்து கொள்ளும் எதிர்கால போட்டிகளில் மேலும் பல வெற்றிகளை பெற வாழ்த்துகிறோம்'' என்று அதில் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவுக்கு மூன்றாவது தங்கம் பாராலிம்பிக் ஈட்டி எறிதலில் சுமித் அன்டில் சாதனை!




பாராலிம்பிக்ஸ் தொடரில் ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் இந்திய வீரர் சுமித் அன்டில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மாற்றுத் திறனாளிகளுக்கான பாராலிம்பிக்ஸ் விளையாட்டு போட்டி கடந்த ஆகஸ்ட் 28ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. வரும் செப்டம்பர் 8ம் தேதி வரை நடைபெறும் இந்த விளையாட்டு தொடரில் இந்தியா சார்பில் 84 பேர் பங்கேற்றுள்ளனர்.

இதுவரை 2 தங்கம், 4 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 11 பதக்கங்கள் இந்தியாவுக்கு கிடைத்தன. இந்த நிலையில், ஆண்களுக்கான ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் சுமித் அன்டில் வெற்றி பெற்றதன் மூலம் இந்தியாவுக்கான தங்கப் பதக்கம் 3 ஆக உயர்ந்துள்ளது. இறுதிப் போட்டியில், இந்தியாவின் சுமித் 70.59 மீட்டர் நீளத்துக்கு எறிந்து தனது முந்தைய சாதனைகளை அவரே உடைத்துள்ளார்.

முன்னதாக டோக்கியோ பாராலிம்பிக்கில் 68.55 மீட்டர் என்ற சாதனையையும், அதன் பிறகு நடப்பு பாரிஸ் பாராலிம்பிக்கின் இன்றைய இறுதிப் போட்டியில் 70 மீட்டர் என்ற சாதனையையும் சுமித் படைத்திருந்தார். சுமித்தின் 70.59 என்ற சாதனையை மற்ற நாட்டு போட்டியாளர்களால் முறியடிக்க முடியாத நிலையில், அவர் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். இதன் மூலம் இந்தியாவுக்கான தங்கப் பதக்கம் 3 ஆக உயர்ந்துள்ளது.

# பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய திமுக சார்பில் இளைஞரணி புதிய உறுப்பினர் சேர்த்தல்




**திருத்தணி,செப்.04:** திமுக இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அறிவித்ததன் பேரில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம. கிரண் தலைமையில் மாவட்டம் முழுவதும் இல்லம் தோறும் ஒன்றியங்கள். பேரூர். நகரங்கள் உள்ளிட்ட பகுதிகளில் இந்த இளைஞரணி புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம்கள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் திருத்தணி சட்டமன்ற தொகுதியில் அடங்கிய பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய திமுக சார்பாக இந்த புதிய உறுப்பினர்கள் அட்டை வழங்கும் முகாம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர். ஜி. ரவீந்திரா தலைமையில் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான எஸ். சந்திரன் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இதில் ஏராளமான இளைஞர்கள் ஆர்வமுடன் புதிய உறுப்பினர் படிவங்கள் பெற்று பூர்த்தி செய்து வழங்கினர். நிகழ்ச்சியில் பொதட்டூர் பேட்டை பேரூர் செயலாளர் டி. ஆர்.கே. பாபு . மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ. நாகலிங்கம். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் த. மோதிலால் பொதட்டூர் பேட்டை பேரூர் செயலாளர் டி.கே பாபு. .டி. எம் .சுகுமாரன். புவனேஷ் குமார். டி .ஆர். திலீபன். மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர். இ.கே. உதயசூரியன் . பள்ளிப்பட்டு ஒன்றிய குழு துணை தலைவர் பொன்.சு. பாரதி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## செந்துறை ஒன்றிய பகுதிகளில் ரூ.28.50 இலட்சம் மதிப்பீட்டில்

# குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைப்பு

**அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு**



**அரியலூர்,செப்.04:** அரியலூர் மாவட் டம், செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில், தமிழக முதல்வர் உத்தர வின் படி , இருங்களாக் குறிச்சி கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளையும், பின்னர், ஆதனக்குறிச்சி கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளையும், அதனைத் தொடர்ந்து கோட்டைக்காடு கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளையும் என மொத்தம் ரூ.28.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். தொடர்ந்து மணக்குடையான் ஊராட்சியில் ஆலத்தியூர் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் நிறுவன சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் தாமரைப் பூண்டி கிராமத்தில் 30 குடியிருப்புகள், சோழன் பட்டி கிராமத்தில் 35 குடியிருப்புகள், மணக்குடையான் கிராமம் நேரு நகரில் 35 குடியிருப்புகள் என மொத்தம் 100 குடியிருப்புகளுக்கு கட்டப் பட்டுள்ள தனிநபர் சுகாதார வளாகத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அர்பணித்தார். இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சியர் பொ.இரத்தினசாமி, தலைமையில் நடை பெற்றது. இந் நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க. கவிதா, வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்). பழனிசாமி, ஆலத்தியூர் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவன துணைத் தலைவர் (உற்பத்தி) மீனாட்சி சுந்தரம், செந்துறைஒன்றிய திமுக செயலாளர்கள் வி எழில் மாறன்,பூ செல்வராஜ் , வருவாய் வட்டாட்சியர் வேலுமணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜாகீர் உசேன், பிரபாகரன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தருமபுரி கலெக்டர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை கலெக்டர் கி.சாந்தி பெற்றுகொண்டார்.

## நெல்லை டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையில்

# ‘கண் தானம்‘ செய்த குடும்பத்தினர், தன்னார்வலர்களுக்கு பாராட்டு விழா!

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தர் சந்திரசேகர் பங்கேற்பு!**




**நெல்லை,செப்.04:** திருநெல்வேலி டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை சார்பில் கண் தானம் செய்த குடும்பத்தினர் மற்றும் கண் தானம் செய்வதற்கு உறுதுணையாக இருந்த இயக்கத்தின் தலைவர்கள், தன்னார்வலர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு பாராட்டுப் பெருவிழா மற்றும் கண் தான இருவார நிறைவு விழா நெல்லை டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை கூட்ட அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நெல்லை அகர்வால் கண் மருத்துவமனையின் மூத்த மருத்துவர் பிரேம்குமார் ஜோசப் தலைமை தாங்கினார். கருவிழி பிரிவு மருத்துவர் ராணி லட்சுமி வரவேற்றார். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சந்திரசேகர், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று கண் தானம் செய்த குடும்பத்தின் உறுப்பினர்கள் மற்றும் கண் தானம் செய்வதற்கு உறுதுணையாக இருந்த தன்னார்வத் தலைவர்கள், தொண்டர்கள் ஆகியோரைப் பாராட்டி பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். கத்தோலிக்க திருச்சபையின் பங்குத் தந்தைகள் டொமினிக், அருள் வினீஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். டாக்டர் யாஷிகா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். முடிவில் மருத்துவர் அபிநயா நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் மேலாளர் பிரபு, கண் வங்கி மேலாளர் ஜெகதீஷ், பி.ஆர்.ஓ. பேச்சிமுத்து, முகாம் மேலாளர் மாணிக்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

“கண் தானம் செய்வதின் அவசியம்“ குறித்து கல்லூரி மாணவ,மாணவிகளுக்கு நடந்த ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் வரைவு வாக்குச்சாவடி பட்டியலினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்கள்.



இராமநாதபுரம் மாவட்ட பாஜக சார்பில் உறுப்பினர் சேர்க்கை முகாம் மாவட்ட பாஜக தலைவர் தரணி முருகேசன் தலைமையில் மாவட்ட பாஜக அலுவலகத்தில் நடந்தது. ராமநாதபுரம் மாவட்டத்தில் முதல் உறுப்பினராக சுப.நாகராஜன் சேர்க்கப்பட்டு அவருக்கு உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டது. நிகழ்வில் மாநில விவசாய அணி பொதுச்செயலாளர் பிரவின் குமார், மாவட்ட பொதுச்செயலாளர் மணிமாறன், நகர் தலைவர் கார்த்திகேயன், மாவட்ட ஊடக பிரிவு தலைவர் குமரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் வீரபாகு, மாவட்ட ஊடக பிரிவு செயலாளர் கார்த்திக், மாவட்ட பட்டியல் அணி தலைவர் நேதாஜி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நமது வியாபார சங்கத்தின் சார்பாக வெள்ளையூர் மறுவாழ்வு முகாமில் தங்கி இருக்கும் அனைவருக்கும் பெட்ஷீட், பிஸ்கட், வாழைப்பழம் வழங்கப்பட்டது. கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட தலைவரும், உளுந்தூர்பேட்டை நகர வியாபார சங்கத் தலைவர் S.T.M. முகம்மது கனி தலைமையில் மாவட்ட செயலாளர் G.இளங்கோவன்,மாநில இணைச் செயலாளர் R.மதியழகன், மாவட்ட துணை செயலாளர் K.அத்தாவூர் ரஹ்மான், மற்றும் நகர நிர்வாகிகள் மணி, அசோகன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கல்லாபுரத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் உடுமலைப்பேட்டை மற்றும் குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகளுக்கான ஆணைகளை வழங்கினார்கள். உடன் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி அவர்கள், உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் ஜஸ்வந்த் கண்ணன், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.




7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஓய்வு பெற்ற பள்ளி கல்லூரி ஆசிரியர் நலச்சங்கம் சார்பில் தர்ணா போராட்டம் நடைப்பெற்றது. புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் அரசாணை எண் 204, 30.6.2022 படி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு காசு இல்லா மருத்துவ சிகிச்சை உறுதிப்படுத்த வேண்டும், சிகிச்சை செலவை குறைத்து வழங்கும் யுனைடெட் (united) இந்தியா இன்சூரன்ஸ் மற்றும் எம்டி இந்தியா காப்பீட்டு நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அதிக கட்டணம் வசூலிக்கும் மருத்துவமனைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட ஏழு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஓய்வு பெற்ற பள்ளி, கல்லூரி ஆசிரியர் நல சங்கம் சார்பில் நாகர்கோவில் வேப்பமூடு பூங்கா முன்பு தர்ணா போராட்டம் நடைபெற்றது.இந்த தர்ணா போராட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் கலந்து கொண்டனர்.




பழநி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் சரவணன் தலைமையில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் சம்பந்தமாக இந்து அமைப்பு நிர்வாகிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் உட்பட அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது



வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் லத்தேரி அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலட்சுமி, பார்வையிட்டு முதல் இடைப்பருவ தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற 12 ஆம் வகுப்பு மாணவன் கார்த்திக்கு புத்தகம் வழங்கி பாராட்டினார்.



தென்காசி மாவட்டம் தென்காசி காசி விஸ்வநாதர் கோவிலில் நடைபெற்று வரும் பணிகளை சட்டமன்ற மதிப்பீட்டு குழு தலைவர்/ சட்டமன்ற உறுப்பினர் எஸ் . காந்தி ராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் மற்றும் அனைத்து சட்டமன்ற குழு உறுப்பினர்களும், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.





பெருந்தலைவர் மக்கள் கட்சி மற்றும் நாடார் அமைப்புக்கள் சார்பாக கள் விற்பனை செய்ய அனுமதி வழங்க வேண்டும் என வலியுறுத்தி சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர்.தனபாலன் தலைமையில் நடைபெற்றது. பனை சார்ந்த 20 லட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றும் வகையில் நாடாண்ட நாடார் சமுதாயம் சார்பாக நடைபெறும் இந்த மாபெரும் கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் நாடார் மக்கள் முன்னேற்ற சங்கத்தின் நிறுவன தலைவர் பொன்.விஸ்வநாதன் நாடார் ஆணைக்கிணங்க நாடார் மக்கள் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக நிர்வாகிகள் சக்திவேல் நாடார், பெஸ்ட் சிவகுமார் நாடார்,ரஞ்சித் நாடார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்கள். மேலும் தமிழ்நாடு நாடார் சங்கம் நிறுவன தலைவர் முத்து ரமேஷ் நாடார் நாடார்,பனை எனும் கற்பகதரு அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் கவிதா காந்திமற்றும் அனைத்து மக்கள் அரசியல் கட்சி நிறுவனத் தலைவர் ராஜேஸ்வரி பிரியா மற்றும்நாடார் உறவின்முறை சங்க நிர்வாகிகள் நாடார் அரசியல் கட்சி பிரமுகர்கள் கள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.



ராஜபாளையம் ஸ்ரீ மாப்பிள்ளை விநாயகர் நற்பணி மன்றத்தின் சார்பில் விநாயகர் சதுர்த்தி விழா செப்டம்பர் ஒன்று முதல் ஏழு நாட்கள் பக்தி சொற்பொழிவு கலை நிகழ்ச்சிகள் மற்றும் மூன்று வேளை அன்னதானமும் மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு அருள்மிகு ஸ்ரீ ஆதி வழிவிடும் விநாயகர் திருக்கோயிலில் இருந்து விநாயகர் சிலை தயார் செய்யப்பட்டு ஊர்வலமாக ஸ்ரீ மாப்பிள்ளை விநாயகர் திருக்கோவிலை வந்தடைந்தது ராஜபாளையம் மக்களுக்கு இந்த ஆண்டு குரோதி கணபதி மற்றும் மோட்ச கணபதி சறுக்கு விளையாட்டு கணபதி முருகன் ரிக்ஷா லோடு கணபதி கோலாட்ட கணபதி முருகன் மற்றும் மாருதி காரில் அண்ணன் கணபதியும் தம்பி முருகனும் வளம் வந்தார்கள் நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஸ்ரீ மாப்பிள்ளை விநாயகர் நற்பணி மன்ற தலைவர் ராமராஜ் தலைமையில் நற்பணி மன்ற நண்பர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்கள்

# செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் சார்பில் சிறப்பு தொழில் கடன் மேளா



**செங்கல்பட்டு,செப்.04:** செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் சார்பில் சிறப்பு தொழில் கடன் மேளா கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அனாமிகா ரமேஷ், தலைமையில் நடை பெற்றது

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் சார்பில் சிறப்பு தொழில் கடன் மேளா கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .அனாமிகா ரமேஷ், தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் சிறப்பு பற்றியும், கடன் திட்டங்கள் பற்றியும், தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள் மற்றும் சலுகைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில், 10 தொழில் நிறுவனங்களிடமிருந்து ரூ.33 கோடிக்கான கடன் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மேலும் 5 நிறுவனங்களுக்கு ரூ.2.28 கோடிக்கான கடன் அனுமதி ஆணைகள் மற்றும் 4 நிறுவனங்களுக்கு ரூ.2.51 கோடிக்கான கடனுதவி காசோலைகள் வழங்கப் பட்டது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் தனது 75 ஆவது ஆண்டு விழாவை இந்த வருடம் கொண்டாடி வருகின்றது. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் உரிமையாளர்கள், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தால் 19.08.2024 முதல் 06.09.2024 வரை நடத்தும் சிறப்பு கடன் முகாமில் பங்கு கொண்டு கடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்து ஆய்வுக் கட்டணத்தில் கொடுக்கப்படும் 50% சலுகையை பெற்றுக் கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் முதுநிலை மண்டல மேலாளர், .ஸி.யி.ரமேஷ், மறைமலை நகர் கிளை மேலாளர் வி.சுந்தரேசன், செங்கல்பட்டு மாவட்ட தொழில் மைய துணை இயக்குநர் .பிரேம்குமார், கருங்குழி அரிசி ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் .குமார், மறைமலை நகர் சிறு, குறு தொழிற்சாலை சங்க செயலாளர் . தனசேகரன், மற்றும் தொழில் முனைவோர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சுற்றுச்சூழலை பாதுகாக்கும் கிராம உதயம் நிறுவனத்திற்கு பசுமை சாம்பியன் விருது

## மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் வாழ்த்து






**ஸ்ரீ வைகுண்டம்,செப்.04:** தூத்துக்குடி மாவட்டத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக மேல ஆழ்வார்தோப்பு கிராம உதயம் நிறுவனத்திற்கு பசுமை சாம்பியன் விருது கிடைத்துள்ளதற்கு மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் வாழ்த்து தெரிவித்தார். தமிழகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை சிறப்பாக செய்து வரும் நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் பசுமை சாம்பியன் விருது தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, தூத்துக்குடி மாவட்டம் முழுவதிலும் பல்வேறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் பொதுமக்களிடமும் பள்ளி கல்லூரிகளில் மாணவ மாணவிகளிடமும் பல்வேறு விழிப்புணர்வு பணிகளை சிறந்த முறையில் செய்தமைக்காக பசுமை சாம்பியன் விருது, பாராட்டு சான்றிதழ் மற்றும் ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலை கிராம உதயம் மேல ஆழ்வார் தோப்பு கிளை அலுவலகத்திற்கு கிடைத்துள்ளது. குறிப்பாக, தாமிரபரணி ஆற்றில் தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல், பிளாஸ்டிக் ஒழிப்பு, பல லட்சக் கணக்கான மரக்கன்றுகளை தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கி அதனை நட்டு பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல் என பல்வேறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு பணிகளையும் விழிப்புணர்வு பணிகளையும் கிராம உதயம் நிறுவனர் சுந்தரேசன் ஆலோசனையின் பேரில் கிராம உதயம் ஆழ்வார்தோப்பு கிளை அலுவலகப் பணியாளர்கள் செய்து வருகின்றனர். இதற்காக மாசு கட்டுப்பாட்டு வாரியப் பொறியாளர் கலைவாணி வழங்கிய பசுமை சாம்பியன் விருது, பாராட்டு சான்றிதழ் மற்றும் ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையுடன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இளம் பகவத்தை நேரில் சந்தித்து கிராம உதயம் வழக்கறிஞர் மற்றும் ஆலோசனை குழு உறுப்பினர் டாக்டர் புகழேந்தி பகத்சிங், மேல ஆழ்வார்தோப்பு கிராம உதயம் நிர்வாக கிளை மேலாளர் வேல்முருகன், தனி அலுவலர் ராமச்சந்திரன் ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

### தாமிரபரணி தூய்மை பணியில் கிராம உதயம்

ஸ்ரீவைகுண்டம் தாமிரபரணி ஆற்றில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அமலைச் செடிகளின் ஆக்கிரமிப்பு அதிகரித்து காணப்பட்டது. அப்போது,

தாசில்தார்களாக பணியாற்றிய தாமஸ் அருள் பயஸ், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் தாமிரபரணி ஆற்றை தூய்மைப்படுத்தும் விதமாக பொதுமக்கள் மற்றும் கிராம உதயம் பணியாளர்களோடு இணைந்து அமலை செடிகளை முற்றிலுமாக அகற்றினார். இதைப் போன்று, பிளாஸ்டிக் ஒழிப்பு மரம் வளர்ப்பு என பல்வேறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் கிராம உதயம் நிறுவனர் சுந்தரேசன் ஆலோசனையின் பேரில் மேல ஆழ்வார்தோப்பு கிளை அலுவலக பணியாளர்கள் ஈடுபட்டு வருவதால் கிராம உதயம் நிறுவனத்திற்கு பசுமை சாம்பியன் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சிக்கு சொந்தமான இடத்தில் குடிநீர் நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கு வந்த

# அதிகாரிகளை முற்றுகையிட்டதால் திருத்தணி அருகே பரபரப்பு



**திருத்தணி,செப்.04:** திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கார்த்திகேயபுரம் ஊராட்சிக்கு சொந்தமான நிலத்தில் குடிநீர் வடிகால் வாரிய துறை அதிகாரிகள் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கு நிலத்தை சீர் செய்ய வந்தபோது ஊர் பொதுமக்கள் திரண்டு வந்து. முற்றுகை யிட்டதால் அந்த பணி கைவிடப்பட்டது. கார்த்திகேயபுரம் ஊராட்சியில் கல்லாங்குத்து புறம்போக்கு . சர்வே எண் 385 . பன்னெடுங் காலமாகவே.

சுடுகாட்டுக்கும். மற்றும் மஞ்சுவிரட்டு உள்ளிட்ட வைக்கும் பயன்பாட்டில் இருந்து வந்தது. கடந்த 1988 ஆம் ஆண்டு வருவாய்த்துறை ஊழியர்கள் சங்கம் என்ற பெயரில் ஊராட்சியின் அனுமதி இல்லாமல் அந்த ஊழியர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது .இதை எதிர்த்து கார்த்தி கேயபுரம் ஊராட்சி சேர்ந்த பொதுமக்கள்.

நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தற்போது வரை நிலுவையில் உள்ளது .

இந்நிலையில் இந்த நிலத்தில்கூட்டு குடிநீர் திட்டத்தின் படி. தரை மட்டத்தில் நீர் தேக்க தொட்டிகட்டுவதற்காக குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் பொக்லைன் இயந்திரம் மூலம் . நிலத்தை சீர் செய்ய முயற்சித்தனர். தகவல் அறிந்த கார்த்திகேயபுரம் ஊராட்சியை சேர்ந்த பொதுமக்கள் திரண்டு வந்து இந்த இடம் எங்கள் கிராமத்துக்கு சொந்தமானது. இங்கே சுடுகாட்டுக்கு பயன்பாடு மற்றும் மஞ்சுவிரட்டு உள்ளிட்ட பயன்பாட்டுக்கு உள்ள நிலமாகும். இந்த இடத்தை குடிநீர் நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம். மேலும் இது விஷயமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இது போல் இதை அனுமதிக்க கூடாது என்று அதிகாரிகளை முற்றுகையிட்டனர். அப்போது விரைந்து வந்த காவல்துறையினர் சமரச பேச்சுவார்த்தை நடத்திய பின் முறையாக அரசிடம் அனுமதி பெற்ற பிறகு நீங்கள் இங்கே கட்டலாம் என்று கூறியதாலும்.

பொது மக்கள் எதிர்ப்பாலும். நீர்த்தேகத் தொட்டி கட்டுவதற்கு நிலத்தை சீர் செய்ய வந்த அதிகாரிகள் அந்த பணியை நிறுத்திவிட்டு கலைந்து சென்றனர். இதனால் சிறிது நேரம் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள் சார்பாக போஷன் அபியான் திட்டத்தின் கீழ் நடைபெற்ற ஊட்டச்சத்து மாத விழாவில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

## தென் மண்டல சிபிஎஸ்இ பள்ளிகளுக்கு இடையிலான கராத்தே போட்டியில் தூத்துக்குடி செர்வைட் சிபிஎஸ்இ மாணவர்கள் சாதனை

தூத்துக்குடி, செப்.04

திருநெல்வேலி மாவட்டம் சமூகரெங்கபுரம் அற்புதம் சாமுவேல் பப்ளிக் பள்ளியில் வைத்து 30:08:2024 அன்று நடைபெற்ற தக்சின் சகோதிய அமைப்பின் மூலம் சிபிஎஸ்இ பள்ளிகளுக்கு இடையிலான தென் மண்டல அளவிலான கராத்தே போட்டி வெகு சிறப்பாக நடைபெற்றது.

தென் மாவட்டங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.



இதில் தூத்துக்குடி மாவட்டம் செர்வைட் சிபிஎஸ்இ பள்ளியின் மாணவர்கள் 30 கிலோ உட்பட்ட எடை சண்டை பிரிவில் ஜெபின் சஞ்சய் தங்கப்பதக்கத்தையும், 60 முதல் 65 கிலோ உட்பட்ட எடை சண்டை பிரிவில் ஜெனிஸ் ஆண்டனி வெள்ளிப் பதக்கத்தையும் வென்று பள்ளிக்கு பெருமை சேர்த்தனர்.

வெற்றி பெற்ற மாணவர்களை பள்ளி தாளாளர் சகோதரி புளோரா மேரி பள்ளி முதல்வர் மெர்சி இம்மாகுலேட், சோபுகாய் கோஜூரியோ கராத்தே இந்திய தலைமை பயிற்சியாளர் மற்றும் தொழில்நுட்ப இயக்குனர் டாக்டர் சுரேஷ்குமார், தூத்துக்குடி மாவட்ட கராத்தே செயலாளர் சென்சாய் முத்துராஜா மற்றும் பல்வேறு அமைப்பினர்கள் பெற்றோர்கள் பாராட்டினர்.

### மீஞ்சூர் ஒன்றியத்தில் 9, இடங்களில்

## இந்திய தேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர்ஸ் நிலத்தரகர்கள் நல சங்கத்தின் கொடியேற்றும் விழா

பொன்னேரி செப்.4

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் ஒன்றியத்தில் அடங்கிய மீஞ்சூர், மேட்டுப்பாளையம், வேண்பாக்கம், தடபெரும்பாக்கம், பொன்னேரி, உள்ளிட்ட ஒன்பது இடங்களில் இந்திய தேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர்ஸ் நிலத்தரகர்கள் நல சங்கத்தின் சார்பில் சங்க கொடியேற்றும் விழா, நல திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது,



இந்நிகழ்ச்சிக்கு நிலத்தரகர்கள் நல சங்கத்தின் தேசிய தலைவர் வி.என். கண்ணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சங்கத்தின் கொடியினை ஏற்றி வைத்தார்.

இதில் மாநில அமைப்பாளர் (பில்டர்) ஜி.வி. என்.குமார், திருவள்ளூர் வடக்கு மாவட்ட தலைவர் மகேந்திரன், செயலாளர் சாமுவேல், கட்டுமான அமைப்புசாரா மாவட்ட தலைவர் மீஞ்சூர் கணேஷ் குமார், உள்ளிட்டவர்களின் முன்னிலையில் கொடி ஏற்றுதல் அதனைத் தொடர்ந்து நலிந்தோருக்கு நலதிட்டஉதவி, அன்னதானம் வழங்கப்பட்டது, இதில் ஒன்றிய மற்றும் நகர பொறுப்பாளர்கள் விஸ்வநாதன், ஜெய் மதன், சண்முகம், பாபு, தேவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகளும் மற்றும் சங்கத்தின் உரப்பினார்கள் என பலர் கலந்து கொண்டனர்.

### பரமக்குடியில் நடைபெறவுள்ள இமானுவேல் சேகரன் 67வது நினைவு தின நிகழ்ச்சி

## கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கப்படவுள்ளது – மாவட்ட ஆட்சித்தலைவர்

சிவகங்கை, செப்.04

வருகின்ற 11.09.2024 ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நடைபெற இருக்கின்ற இமானுவேல் சேகரன் 67வது நினைவு தினம் அமைதியாக நடைபெறவும், சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், மாணவ/மாணவியரின் நலன் கருதி,



எதிர்வரும் 11.09.2024 ஆம் தேதி அன்று சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை, திருப்புவனம், மானாமதுரை, இளையான்குடி வட்டங்கள் / ஒன்றியங்களில் உள்ள பள்ளிகளுக்கு / கல்லூரிகளுக்கு / இதர கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறையினை அளித்தும், அதற்கு பதிலாக 21.09.2024 அன்று பள்ளிகள்/ கல்லூரிகள்/இதர கல்வி நிறுவனங்கள் இயங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## ...உலக செய்திகள்...

### காசாவில் 6 பிணைக்கைதிகள் கொலை எதிரொலி


## எஞ்சியவர்களை மீட்க நடவடிக்கை கோரி இஸ்ரேலில் போராட்டம்

டெல் அவிவ்: காசாவில் ஆறு பிணைக்கைதிகள் கொல்லப்பட்டதை அடுத்து, எஞ்சியவர்களை மீட்க இஸ்ரேலிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அந்நாட்டின் பல்வேறு நகரங்களில் போராட்டங்கள் நடைபெற்றன.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7 அன்று தாக்குதல் நடத்தி சுமார் 1,200 பேரைக் கொலை செய்தனர். சுமார், 250 பேரை பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்றனர். இந்த சம்பவத்தை அடுத்து, ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், பிணைக்கைதிகளில் 6 பேரை ஹமாஸ் அமைப்பினர் கொன்றனர். அவர்களின் உடல்களை இஸ்ரேலிய ராணுவம் மீட்டது. இதையடுத்து, இஸ்ரேலிய அரசுக்கு எதிராக அந்நாட்டின் ஜெருசலேம், டெல் அவிவ் உள்ளிட்ட நகரங்களில் பெரும் போராட்டங்கள் நடைபெற்றன.

ஹமாஸ் உடன் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் பிணைக்கைதிகள் உயிரோடு வந்திருப்பார்கள் என்றும் இஸ்ரேலிய ஆட்சியாளர்களே இதற்கு பொறுப்பு என்றும் கூறி லட்சக்கணக்கான இஸ்ரேலியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். ஜெருசலேமில், போராட்டக்காரர்கள் வீதிகளை மறித்து பிரதமரின் இல்லத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தனர். டெல் அவிவின் பிரதான நெடுஞ்சாலைகளில், கொல்லப்பட்ட பிணைக்கைதிகளின் படங்களுடன் கொடிகளை ஏந்தியவாறு ஏராளமா



னோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இஸ்ரேலிய தொழிற் சங்கங்களின் அழைப்பை ஏற்று அந்நாட்டில் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. இதனால், வர்த்தக நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அனைவரும், இஸ்ரேலிய அரசு விரைவாக ஹமாஸ் அமைப்புடன் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்றும் எஞ்சிய பிணைகைதிகளை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

பிணைக்கைதிகளின் குடும்பங்களுக்கான அமைப்பு, பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கடுமையாக கண்டித்துள்ளது. "பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்கள் கடந்த 11 மாதங்களாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்த நிலையில் தற்போது கொல்லப்பட்டுள்ளனர். அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில் ஏற்பட்ட தாமதமே இதற்குக் காரணம்" என்று அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் காரணமாக 40,738 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கு போதிய தங்குமிட வசதிகள் இல்லாததாலும், உணவு போதிய அளவில் கிடைக்காததாலும் அவர்கள் கடும் நெருக்கடியுடன் இக்கட்டான சூழ்நிலையில் வாழ்வதாகவும் அது தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக நுழையும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

வாஷிங்டன், கனடா எல்லை வழியே அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக நுழையும் இந்தியர்களின் எண்ணிக்கை இதுவரை இல்லாத அளவு உயர்ந்துள்ளதாக அமெரிக்க எல்லை பாதுகாப்புத் துறை புள்ளி விவரங்களில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்



தாண்டு ஜனவரி – ஜூன் காலகட்டத்தை ஒப்பிடுகையில், நடப்பாண்டு இதே காலகட்டத்தில் எண்ணிக்கை 47% அதிகரித்துள்ளது. கடந்த ஜூனில் மட்டும் 5,152 இந்தியர்கள் சட்ட விரோதமாக உள்நுழைந்ததாகத் தெரிவித்துள்ளனர்.


இந்த எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக அமெரிக்காவில் நுழையும் இந்தியர்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பதால் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க எல்லை பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

## வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் சுயதொழில் தொடங்கி பயனடைந்து வரும் மகளிர் தமிழ்நாடு முதல்வருக்கு மனநிறைவுடன் நன்றி

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 30,457 புதிய தொழில்முனைவோர்களுக்கு ரூ.18.92 கோடி மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

"வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மகளிருக்கான ஒரு வரப்பிரசாதம்"

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நல்லாகவுண்டம்பட்டி ஊராட்சியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கும் "நிறைந்தது மனம்" நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் நடைபெற்றது. பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:



தமிழ்நாடு முதலமைச்சர் மகளிரின் முன்னேற்றத்திற்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். உலக வங்கி உதவியுடன் செயல்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0 என்று அழைக்கப்படும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டமானது மூன்றாம் தலைமுறை வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார அதிகாரம் அளிக்கும் திட்டம் ஆகும். ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் வாழ்க்கையில் நிலையான வருமானத்தைப் ஏற்படுத்திடவும், அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றவும் பெண்களை முன்னிலைப்படுத்தி புதிய நிறுவனங்கள் உருவாக்கிடவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. இன்றையதினம் நடைபெறும் நிகழ்ச்சியின் வாயிலாக 2 இணை மானிய திட்ட பயனாளிகளுக்கு ரூ.9 லட்சம் மானிய தொகையுடன் கூடிய ரூ.30 லட்சம் கடன் தொகைக்கான வங்கி காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 31 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் உள்ள 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கிக்கும் தமிழ்நாடு அரசுக்கும் இடையே 70:30 என்ற நிதிப் பகிர்வு விகிதத்தில் இத்திட்டத்திற்காக 910.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் ஊரக தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழி வகுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கங்களாக கொண்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் சேலம் மாவட்டத்தில் ஓமலூர், தாரமங்கலம், மேச்சேரி, பனமரத்துப்பட்டி, வீரபாண்டி, ஆத்தூர் மற்றும் சங்ககிரி ஆகிய 7 வட்டாரங்களில் 154 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 30,457 புதிய தொழில்முனைவோர்களுக்கு ரூ.18.92 கோடி மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் சுய உதவி குழு பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தை சார்ந்த உறுப்பினர்கள் முதன்மை பயனாளிகளாக பயன்பெற தகுதி உடையவர்களாகவும் மேலும் பெண்கள் ஆதிதிராவிட பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.



வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் ரூ.30 லட்சம் நிதியில் ஓமலூர் வட்டாரத்தில் மகளிர் விவசாய உற்பத்தியாளர்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ள வளர் வளம் உற்பத்தியாளர் கூட்டமைப்பு நிறுவனத்தின் எண்ணெய் உற்பத்தி செய்யும் செக்கு ஆலை ஆகியவற்றை பார்வையிட்டு உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடி, கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்து கேட்டறியப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் மகளிர் விவசாய உற்பத்தியாளர்களை கொண்டு 106 உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களுடைய விவசாயத் தொழில் உற்பத்தி திறனை அதிகரித்து உபரி விலை பொருட்களை ஒன்று திரட்டுவதற்காக ஒவ்வொரு உற்பத்தியாளர் குழுவிற்கும் ரூ.75,000/ வீதம் 106 குழுக்களுக்கு ரூ.79,05,000/ வழங்கப்பட்டு விலை பொருட்கள் ஒருங்கிணைப்பு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஒரே வகையான தொழில் ஈடுபட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 22 தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களது தொழில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு குழுவினருக்கும் தலா ரூ.75,000/வீதம் ரூ.9,00,000/ நிதி வழங்கப்பட்டு தொழில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

விவசாய உற்பத்தியாளர் குழுக்களில் இருந்து ஆர்வமுடைய மகளிர் உற்பத்தியாளர்களை தேர்ந்தெடுத்து அவர்களை ஒருங்கிணைத்து ஓமலூர் மற்றும் ஆத்தூர் ஆகிய வட்டாரங்களை தலைமை இடமாக கொண்டு 2 உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு புதிதாக துவங்கப்பட்டு தலா ரூ.30 லட்சம் வீதம் ரூ.60 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்பில் மகளிர் உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது விளைபொருட்களை ஒருங்கிணைத்தல், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களுக்கு சேவையை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் 30% மானியத்துடன் தொழிற்கடன் வழங்கும் இணை மானிய திட்ட செயல்பாட்டின் மூலம் சேலம் மாவட்டத்தில் 314 நபர்களுக்கு தொழிலை மேம்படுத்துதல் மற்றும் புதிதாக தொழில் அமைப்பதற்காக 30 சதவீதம் மானியத் தொகை ரூ.4.80 கோடி மானியத்துடன் ரூ.14.85 கோடி மதிப்பிலான கடன் உதவிகள் வழங்கி தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.



சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் தாங்கள் செய்து கொண்டிருக்க கூடிய தொழிலை மேம்படுத்த அல்லது புதிதாக தொழில் துவங்க விரும்பும் ஒரு நபருக்கு தொழில் சார்ந்த அனைத்து வழிகாட்டுதல்களையும் செய்து தொழிற் திட்டம் தயார் செய்தல் அதற்கு தேவையான சான்றிதழ்களை பெற்றுத் தருதல் உள்ளிட்ட சேவைகளை வழங்குவதற்காக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் மற்றும் வீரபாண்டி ஊராட்சியில் உள்ள கிராம சேவை மைய கட்டிடம் ஆகிய இரண்டு இடங்களில் மதிசிறகுகள் தொழில் மையம் என்ற ஓரிட சேவை மையம் அமைக்கப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு தொழில் சார்ந்த 3500 சேவைகளை வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது இசேவை மையத்தில் வழங்கப்படும் சேவைகளும் இங்கு வழங்கப்படுகிறது.

விவசாய உற்பத்தியாளர் குழுக்களில் இருந்து ஆர்வமுடைய மகளிர் உற்பத்தியாளர்களை தேர்ந்தெடுத்து அவர்களை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் குழு கூட்டமைப்புகளை அமைத்தல் கூட்டமைப்புகள் மூலம் கூட்டமைப்பின் பங்குதாரர்களுக்கு விவசாயம் சார்ந்த தொழில்நுட்ப பயிற்சிகளை 254 சமுதாய பண்ணைப்பள்ளியில் 7620 நபர்களுக்கு விவசாயம் சார்ந்த தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி பகுதிகளில் உள்ள இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களின் பயிற்சி தேவைகளை கண்டறிந்து உள்ளூர் மற்றும் பாரம்பரிய வருமானம் ஈட்டக்கூடிய தொழிற்பயிற்சிகளில் உள்ளூர் தொழில்நுட்ப வல்லுநர்கள் நிபுணர்கள் முன்னோர்களை முதன்மை பயிற்றுநராக தேர்வு செய்து மூலம் 1554 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சியை வழங்கிப்பட்டு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

சேலம் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் கொரோனா காலகட்டத்தில் ஊரக தொழில்களை மேம்படுத்தும் வகையில் தனிநபர் கடன், தனிநபர் தொழில் கடன் மற்றும் திறன் பெற்ற புலம்பெயர்ந்த இளைஞர்களுக்கும் கடனாக கோவிட் 19 சிறப்பு நிதி தொகுப்பின் கீழ் 7 வட்டாரங்களில் 154 ஊராட்சிகளில் 3,910 பயனாளிகளுக்கு ரூ.9.53 கோடி கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வழியாக கடன் நிதி வழங்கப்பட்டு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

முன்னதாக, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில், அரசு மானியத்துடன் வழங்கப்பட்ட கடன் உதவி திட்டத்தின் கீழ் சூரிய ஒளி மூலம் எண்ணெய் வித்துக்களை உலர்த்தும் இயந்திரங்கள், பாக்கு உடைக்கும் இயந்திரம், மர செக்கு இயந்திரம் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு பொருட்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் செய்தியாளர்கள் பார்வையிட்டனர்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் 30 சதவீத மானியத்துடன் ரூ.30 இலட்சம் கடனுதவி பெற்று பயனடைந்து வரும் வளர்வளம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் உறுப்பினர் கவிதா தெரிவித்ததாவது.

எனது பெயர் கவிதா, நான் ஓமலூர் வட்டம் நல்லாக்கவுண்டம்பட்டி பகுதியில் வசித்து வருகிறேன். எங்களது பகுதியில் விவசாயமே பிரதான தொழிலாகும். விவசாயம் சார்ந்த சுய தொழில் மேற்கொள்ள வேண்டுமென எங்களது பகுதியில் உள்ள பெரும்பாலான பெண்களின் விருப்பமாக இருந்தது. இதற்கான பொருளாதார மூலதனத்தினை குடும்பத்திலிருந்து பெறுவது எங்களுக்கு கடினமாக இருந்தது.

இச்சூழ்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மகளிரின் முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவது குறித்து பத்திரிக்கைகளில் செய்தியாக பார்த்தோம். எங்களது சுய தொழில் தொடங்க வேண்டும் என்ற நோக்கத்திற்கு இச்செய்தி ஒரு புத்துணர்ச்சி கிடைத்ததாக கருதி உடனடியாக உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தினை தொடங்கினோம். எங்களது வளர்வளம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் தற்பொழுது 1,035 மகளிர் உறுப்பினர்களாக உள்ளோம்.

வாழ்ந்துகாட்டுவோம்திட்டத்தின்மூலம்சுயதொழில்தொடங்க கடனுதவிகள் வேண்டி விண்ணப்பித்தோம். 30 சதவீத மானியத்துடன் இதுவரை ரூ.30 இலட்சம் கடனுதவி பெற்றுள்ளோம். இதன்மூலம் செக்கு எண்ணெய் உற்பத்தி செய்யும் நிறுவனம், சூரிய ஒளி மூலம் எண்ணெய் வித்துக்கள் உலர்த்தும் இயந்திரம், கால்நடை தீவன விற்பனை, விவசாயத்திற்கு தேவையான விதைகள் விற்பனை, உயிரி உரங்கள், மஞ்சள் விற்பனை, உளுந்து, கடலை, கொப்பரை உள்ளிட்ட பொருட்கள் விற்பனை செய்து வருகிறோம். இதன் மூலம் மாத வருமானமாக ரூ.1 இலட்சம் வரை கிடைக்கிறது.

மகளிரிக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை போல தமிழ்நாடு முதலமைச்சர் சிறந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இத்தகைய சிறப்பு திட்டங்கள் வாயிலாக எங்களை போன்ற மகளிருக்கு சுய தொழில் வாய்ப்பை ஏற்பத்தி கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு வளர்வளம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் உறுப்பினர் கவிதா தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டை தலைசிறந்த மாநிலமாக திகழச் செய்யும் வகையில் வேளாண்மை, மகளிருக்கான சுய தொழில் என அனைத்துத் துறைகளிலும் புதுமையான பல்வேறு திட்டங்களை கால சூழ்நிலைக்கேற்ப அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். பல்வேறு தரப்பு மக்களின் ஆக்கப்பூர்வமான எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) வாணி ஈஸ்வரி, மாவட்ட செயல் அலுவலர் ம.ஜெய கணேஷ், வாழ்ந்து காட்டுவோம் திட்ட துணை முதன்மை செயலாக்க அலுவலர் ஹரி, நல்லாகவுண்டம்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் சின்னதுரை மற்றும் மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

**செய்தி வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சேலம் மாவட்டம்.**

# பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு கூட்டம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி தலைமையில் நடைபெற்றது

திண்டுக்கல், செப்.04

திண்டுக்கல்மாவட்டம், சீலப்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா. பூங்கொடி, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள் 2011இன் படி, பள்ளி மேலாண்மைக்குழுவானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுகட்டமைப்பு செய்தல் அவசியம். அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 1,315 அரசு தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள் மற்றும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் நான்கு கட்டங்களாகபள்ளிமேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு கூட்டம் நடத்தப்பட்டது.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் 02.08.2024 அன்று அரசுப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு குறித்த பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக்கூட்டம் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து, முதல் கட்டமாக 10.08.2024 அன்று 475 அரசு தொடக்கப்பள்ளிகளிலும், இரண்டாம் கட்டமாக 17.08.2024 அன்று 471 அரசு தொடக்கப்பள்ளிகளிலும், மூன்றாம் கட்டமாக 24.08.2024 அன்று 167 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும்,

நான்காம் கட்டமாக 31.08.2024 அன்று 200 அரசு நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 2 அரசு மேல்நிலைப்பள்ளிகள் என 202 அரசுப்பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 1315 பள்ளிகளில் பள்ளி மேலாண்மை குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வியின் தரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளியின்வளர்ச்சி, பள்ளியின் தரம், ஆசிரியர்களின் வருகை, கற்பித்தல், தேவையான அடிப்படை வசதிகள் உள்ளிட்டவற்றை பார்த்து, அறிந்து அவற்றை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவு, சீருடை, பாடநூல் உள்



ளிட்ட அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதை உறுதி செய்து, சமுதாயத்துக்கும் பள்ளிக்கும் தொடர்பு ஊடகமாக இருக்க வேண்டும். அனைத்து பள்ளி குழந்தைகளையும் (6 முதல் 14 வயது) பள்ளியில் சேர்ப்பது, அத்தோடு அவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதி செய்ய வேண்டும். மாற்றுதிறனாளிகள், குறைபாடுள்ள குழந்தைகளைக் கண்டறிந்து அவர்கள்கல்வியைத் தொடரும் வகையிலான வசதிகள் மற்றும் பள்ளியில் அடிப்படைவசதிகளைஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்துதல் மற்றும் இலவச கட்டாய கல்வி உரிமை சட்டத்தில் கூறப்பட்டுள்ளவற்றை நடைமுறைப்படுத்துதல் ஆகிய பணிகளை பள்ளி மேலாண்மைக்குழு மேற்கொள்ள வேண்டும்.

பள்ளி மேலாண்மைக்குழுவானது மாதம் ஒரு முறை மற்றும் தேவைப்படும் நேர்வுகளில் அடிக்கடி ஒன்றுகூடி, பள்ளி வளர்ச்சித்திட்டங்களை தீர்மானித்து, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உறுப்பினர்கள் வருகையையும், பள்ளிக்குத் தேவையான அவசரகாலத் திட்டமிடல்களையும் பெற்றோர் செயலியில் பதிவு செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் 24 உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவானது மாதம் ஒருமுறை கூடி மாவட்ட அளவிலான பள்ளிகளின் தேவைகளை மதிப்பீடு செய்து, சார்ந்த துறைகள் மூலம் தேவைகளை நிறைவேற்றும் வகையில் செயல்படும்,

பள்ளி மேலாண்மைக் குழுவினுடைய முக்கியத்துவம் மற்றும் பொறுப்புகளை அனைவரும் அறிந்து, குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக்காக திறம்பட செயல்பட வேண்டும், என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், திண்டுக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் இரா.புண்ணியகோடி, திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி) அமுதா, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி உதவித்திட்ட அலுவலர், வட்டாரக்கல்வி அலுவலர்கள், பெற்றோர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# பொதுமக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம்

ஓசூர், செப்.4

ஓசூர் மாநகராட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது.

இதில், பல்வேறு சேவைகளுக்காக பொதுமக்களிடமிருந்து 267 மனுக்கள் பெறப்பட்டன. இந்த மனுக்களுக்கள் மீது ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுக்குமாறுசம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு, ஆணையாளர் ஸ்ரீகாந்த் உத்தரவிட்டார்.

### கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக

# நடமாடும் கால்நடை மருத்துவ வாகனங்களை பயன்பாட்டிற்காக அமைச்சர் தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை, செப்.04



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பாக நடமாடும் கால்நடை மருத்துவ வாகனங்களை பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர், சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்), மாநில தடகளச் சங்கத்துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 20 வது கால்நடை கணக்கெடுப்பின்படி 739467 பசுக்கள், 5114 எருமைகள், 177712செம்மறியாடுகள்மற்றும்248410 வெள்ளாடுகளும் உள்ளன.

கால்நடைகளுக்கு இலவச கால்நடை மருத்து சேவைகளான சிகிச்சை, குடற்பழு நீக்கம், செயற்கைமுறை கருவூட்டல், தடுப்பூசி போன்ற பணிகள் இம்மாவட்டத்திலுள்ள 124 கால்நடை மருந்தகங்கள், 21 கால்நடை கிளைநிலையங்கள், 5 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 1 கால்நடை பெரு மருத்துவமனை ஆகிய நிலையங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. திருவண்ணாமைலை மாவட்டத்தில் கால்நடைகளுக்கான அவசர சிகிச்சைப் பணியினை 1962 என்ற இலவச சேவை எண் அழைப்பின் மூலம் ஏற்கனவே உள்ள ஒரு அவசர சிகிச்சை வாகனத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் 20.08.2024 அன்று தமிழகத்தில் 200 நடமாடும் கால்நடை மருத்துவ வாகனங்களின் சேவையை துவக்கி வைத்தார்கள். தற்போது திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 1 இலட்சம் கால்நடைகளுக்கு 1 நடமாடும் கால்நடை மருத்துவ வாகனம் என்ற வீதத்தில் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 12 வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்டமாக 10 வாகனங்கள் பெறப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாகனத்திலும் ஒரு கால்நடை மருத்துவர், ஒரு உதவியாளர், மற்றும் ஒரு ஓட்டுநர் ஆகியோரை கொண்டு இவ்வாகனம் செயல்படும்.

மேற்படி நடமாடும் கால்நடை மருத்துவப்பிரிவின் சேவைக்கான அழைப்பு எண் 1962 ஆகும். இது தனியார் ஒப்பந்ததாரர் மூலம் செயல்படும்.

இவ்வாகனம் அரசு கால்நடை நிலையங்களுக்கு வெகு தொலைவில் உள்ள தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகள் அடங்கிய வழித்தடங்களில் ஒரு நாளைக்கு 2 கிராம ஊராட்சிகள் வீதம் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை சிகிச்சை, செயற்கைமுறை கருவூட்டல், குடற்புழுநீக்கம் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

மேலும் மாலை 2 மணி முதல் 5 மணி வரை 1962 என்ற அவசர அழைப்பின் பேரில் வழித்தடத்திற்கான கிராம ஊராட்சிகள் அடங்கிய ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கால்நடைகளுக்கான அவசர சிகிச்சை பணிகளை மேற்கொள்ளும். எனவே, மேற்படி 1962 சேவை எண்ணை தொடர்பு கொண்டு கால்நடைகளின் நலன் காத்து அதன் உற்பத்தித்திறனை அதிகரிக்குமாறும் கால்நடை வளர்ப்போர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அதன்படி, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திருவண்ணாமலை மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத்துறை சார்பாக நடமாடும் கால்நடை மருத்துவ வாகனங்களின் சேவைகளை கால்நடை வளர்ப்போரின் பயன்பாட்டிற்குதொடங்கிவைத்தார்கள்.

இந்நிகழ்வில் தண்டராம்பட்டு ஒன்றியக்குழுத்தலைவர் பரிமளாகலையரசன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

# சினிமா செய்திகள்

சினி ஆல்பம்



## “நெஞ்சமெல்லாம் துடிக்கிறது” - ‘வாழை’ படத்துக்கு ரஜினியின் பாராட்டு

‘வாழை’ திரைப்படத்தை பார்த்த நடிகர் ரஜினிகாந்த் இயக்குநர் மாரி செல்வராஜுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ரஜினிகாந்த் பதிவிட்டுள்ளதாவது: “மாரி செல்வராஜ் உடைய ‘வாழை’ படம் பார்த்தேன். ஒரு அற்புதமான, தரமான படம் தமிழில் ரொம்ப நாளைக்கு பிறகு வந்திருக்கிறது. மாரி செல்வராஜ் தன்னுடைய இளமை பருவத்துக்கே நம்மை அழைத்து சென்றிருக்கிறார்.

அதில் அந்த பையன் அனுபவிக்கும் துன்பங்கள், கஷ்டங்கள் அதை நாமே அனுபவிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

கிளைமாக்ஸில் அந்த பையன் பசியை தாங்காமல் அலையும் போது, அந்த தாய் என் பையனுக்கு ஒரு கைசோறு சாப்பிடவிடவில்லையே என்று கதறும்போது, நமது நெஞ்சமெல்லாம் துடிக்கின்றது.

மாரி செல்வராஜ் தான் ஒரு தலைசிறந்த இயக்குனர் என்பதை இந்த படத்தின் மூலம் நிரூபித்திருக்கிறார். மாரி செல்வராஜுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளும், வாழ்த்துகளும்” இவ்வாறு ரஜினி தெரிவித்துள்ளார்.

ரஜினியின் வாழ்த்துச் செய்திக்கு நன்றி தெரிவித்து பதிலளித்துள்ள மாரி செல்வராஜ், “அன்று பழைய தகரப்பெட்டிக்குள் உங்கள் புகைப்படங்களை தேடி தேடி சேகரித்து வைத்த அந்த சிறுவனின் கனவுக்குள்ளிருந்து அவனின் பிஞ்சு விரல்களை கொண்டே எழுதி சொல்கிறேன் . உங்கள் வாழ்த்துக்கும் அரவணைப்புக்கும் நன்றிகள் எங்கள் சூப்பர் ஸ்டார் அவர்களே!” என்று தெரிவித்துள்ளார்.

## ரசிகர்களால் இணையத்தில் சர்ச்சை – ‘கங்குவா’ படக்குழு அதிர்ச்சி



‘கங்குவா’ வெளியீடு குறித்து ரசிகர்கள் இணையத்தில் தெரிவித்த கருத்துகளால் படக்குழு அதிர்ச்சியடைந்துள்ளது. சிவா இயக்கத்தில் சூர்யா, பாபி தியோல், திஷா பதானி உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் ‘கங்குவா’.

ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் தயாரித்துள்ள இந்தப் படம் முதலில் அக்டோபர் 10ம் தேதி வெளியாவதாக இருந்தது. ஆனால், அன்றைய தினத்தில் ‘வேட்டையன்’ படமும் வெளியாவதால் ‘கங்குவா’ வெளியீடு ஒத்திவைக்கப்பட்டது. இதனை ‘மெய்யழகன்’ விழாவில் சூர்யா உறுதிப்படுத்தினார்.

இது குறித்து ரசிகர்கள் இணையத்தில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். பலரும் படத்தினை ஓடிடியில் வெளியிடுங்கள் என்று கருத்துகள் தெரிவித்தார்கள். மேலும், சிலர் சரியான திட்டமிடல் இல்லை எனவும் குறிப்பிட்டார்கள். இந்த கருத்துகள் அனைத்தையும் ஞானவேல்ராஜா, நேகா ஞானவேல்ராஜா மற்றும் தனஞ்ஜெயன் ஆகியோரை குறிப்பிட்டு தெரிவித்தார்கள்.

இந்த கருத்துகளுக்கு நேகா ஞானவேல்ராஜா பதிலடி கொடுத்து வந்தார். அதற்கு பலரும் எதிர் கருத்துகள் தெரிவிக்கவே, இணையத்தில் பெரும் சர்ச்சை எழுந்தது. இறுதியாக தனஞ்ஜெயன் “‘கங்குவா’ வெளியீடு குறித்து பல்வேறு கருத்துகள், கிண்டல்கள் பார்க்க முடிகிறது. உங்களுடைய கருத்துகள் புரிகிறது அதற்கு நேகா ஞானவேல்ராஜா சரியான முறையில் பதிலளித்து வருகிறார்.

அனைத்து மொழிகளிலும் 5 நாட்கள் விடுமுறை என்பதால் அக்டோபர் 10ம் தேதி வெளியீடு என்பது அற்புதமான தேதி. ஆனால், இப்போது அக்டோபர் அல்லது நவம்பரில் சரியான தேதியை தேர்வு செய்து ஞானவேல்ராஜா எங்களுக்கு தெரிவிப்பார். அதுவரை பொறுமை காத்து தயாரிப்பாளரின் முடிவுக்கு மதிப்பளிக்கவும்” என்று தெரிவித்துள்ளார்.

## டோவினோ தாமஸ் நடிப்பில் 3டியில் உருவாகும் ‘ஏஆர்எம்’



மலையாள நடிகர் டோவினோ தாமஸ், தமிழில் ‘மாரி 2’ படத்தில் நடித்திருந்தார். அவர் நடித்த ‘மின்னல் முரளி’ தமிழிலும் வெளியானது. இந்நிலையில் அவர் மீண்டும் ஒரு, பான் இந்தியா படத்தில் நடித்துள்ளார். ‘ஏஆர்எம்’ என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ள இதை அறிமுகஇயக்குநர்ஜிதின்லால்இயக்கியுள்ளார். மேஜிக் பிரேம்ஸ் மற்றும் யுஜிஎம் மோஷன் பிக்சர்ஸ் மூலம் லிஸ்டின் ஸ்டீபன், டாக்டர். ஜகாரியா தாமஸுடன் இணைந்து தயாரித்துள்ளார். ஃபேன்டஸி படமான இது 3டியில் உருவாகியுள்ளது.

இதில் டோவினா தாமஸ், மூன்று வித்தியாசமான கதாபாத்திரங்களில் தோன்றுகிறார். அவரின் 50வது படமான இதில், கீர்த்தி ஷெட்டி, ஐஸ்வர்யா ராஜேஷ், சுரபி லட்சுமி நாயகிகளாக நடித்துள்ளனர். பசில் ஜோசப், ஜெகதீஷ், ஹரிஷ் உத்தமன், ஹரிஷ் பெரேடி, பிரமோத் ஷெட்டி, ரோகிணி உட்பட பலர் நடித்துள்ளனர். திபு நிணன் தாமஸ் இசையமைத்துள்ளார். மலையாளம், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம் என 6 மொழிகளில் செப்.12ல் இந்தப் படம், வெளியாகிறது.

உள்ளாட்சி சாரல் நாளிதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பத்திரிகை பதிவு மற்றும் புத்தக சட்ட விதிகளின்படி உள்ளாட்சி சாரல் நாளிதழின் சம்பந்தப்பட்ட வழக்குகள் அனைத்தும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது என்பதை அறியவும்.

Printer, Owned and Published by M.Kaliammal, Printed at Annai Abirami Achagam, No.24, Venguchetty Street, Punga Nagar, Chennai - 600 003, and Published from No. 15, Sathiyamurthy Street, Korukkupettai, Chennai - 600 021. Editor: M. Kaliammal.